விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 30 திங்கட்கிழமை (15.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

# போர்க் குற்றவாளிகளை தண்டித்தாக வேண்டும்

## ஐ.நா மனித உரிமைச் சபையில் கரன் பார்கர் வலியுறுத்தல்



(ஜெனிவா)

*வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரில் போர்க்குற்றங்கள், மானிடத்துக்கு எதிரான குற்றங்கள் புரிய படையினருக்கு உத்தரவிட்டவர்கள் தண்டிக்கப்படுதல் அவசியம் என சிரேஷ்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர் கரன் பார்கர் அம்மையார் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.*

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மதியுரைஞர் குழுப் பிரதிநிதியும், ஐ.நா மனித உரிமைச்சபை வள அறிஞர் பிரதிநிதியுமாகிய கரன் பார்கர் அம்மையார் தற்போது நடைபெற்று வரும் ஐ.நா மனித

02ஆம் பக்கம் பார்க்க....



**மருத்துவ பரிசோதனையில் தப்பிக் கொள்வாரா நித்தி?**

10ஆம் பக்கம் பார்க்க....

### 10 ஏக்கர் காடு வவுனியாவில் அழிவு

(வவுனியா)

வவுனியா, இரட்டைப் பெரியகுளம் பிரதேசத்தில் உள்ள காட்டு பகுதியில் ஏற்பட்ட தீ காரணமாக சுமார் 10 ஏக்கர் காடு அழிந்துள்ளது.

இராணுவம், சிவில் பாதுகாப்பு படையினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக இரட்டை பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

20ஆம் பக்கம் பார்க்க....

## நாட்டைப் பிரித்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்க மாட்டேன்

### தமிழருக்கு நான் எதிரானவன் அல்ல-மகிந்த

(கொழும்பு)

உலகை தீவிரவாதம் எந்தளவுக்கு ஆட்டிப்படைத்து வருகிறது என்பதை இன்று நாம் நன்கு அறிவோம். ஆனால் எமது நாட்டில் அது முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் தீவிரவாதிகளுக்கு எதிராகவே நாம் போராடினோம். நாம் தமிழர்களுக்கு எதிராகப் போராடவில்லை. இனி எந்தக் காலத்திலும் எந்தவொரு சூழ்நிலையிலும் நாட்டை பிரிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்க மாட்டேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை

02ஆம் பக்கம் பார்க்க....

### கடும் மழையுடன் மினி சூறாவளி


(கரணவாய்)

கடும் மழையுடன் வீசிய மினி சூறாவளியினால் யாழ்.கரவெட்டி கரணவாயப் பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இந்த மினி சூறாவளி நேற்று பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை சுமார் ஒரு மணி

02ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளால் உலகப் போர் வெடிக்கும் -சம்பிக்க



(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளை உலகில் அடக்க வேண்டும் எனவும் இல்லாது போனால் உலகில் சகல கிராமங்கள், நகரங்களில் வஹாப் அடிப்படைவாதிகள் துப்பாக்கியை கையில் எடுத்து ஆரம்பிக்கும் உலகப் போர் வெகு தொலைவில இல்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்

20ஆம் பக்கம் பார்க்க....

### டெங்கு அபாயம் மூடப்பட்டது விடுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதி தற்காலிகமாக மூடப்படுவதுடன், முதலாம், இறுதிவருட கலைப்பீட மாணவர்களுக்கான விரிவுரைகளும் இன்று முதல் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் கடந்த சில தினங்களாக காய்ச்சலால பாதிக்கப்பட்ட மாணவிகள் 12 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும், அவர்க

20ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோர் குறித்த ஐ.நா குழுவை அனுமதியோம்

### இலங்கை அரசு விடாப்பிடி

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள காணாமல் போனோர் தொடர்பில் ஆராயும் ஆணைக்குழுவின் பணிகள் நிறைவடையும் வரையில், தன்னிச்சையற்ற முறையில் காணாமல் போதல் தொடர்பில் செயற்பட்டு வரும் ஐ.நா குழு இலங்கைக்கு வருவதை அரசாங்கம் ஏற்க மறுத்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமை பேரவையின 27-வது அமர்வில், தன்னிச்சையற்ற முறையில் காணாமல் போதல் தொடர்பில் செயற்பட்டு வரும் ஐ.நா குழு, இலங்கை விஜயத்திற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளது.

02ஆம் பக்கம் பார்க்க....

## ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல்!

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை 2015ஆம் ஆண்டு முதல் இரண்டு வாரங்களுக்குள் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில் ஜனவரி மாதம் 7ஆம் திகதிக்கும் 11ஆம் திகதிக்கும் இடைப்பட்ட நாளொன்றில் தேர்தல் நடைபெறும் என்றும் பெரும்பாலும் 8ஆம் திகதி தேர்தல் நடத்தப்படலாம் என்றும் அத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நவம்பர் 20ஆம் திகதி அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்

20ஆம் பக்கம் பார்க்க....

### நீதிமன்ற ஆலோசனையை மகிந்த பெறமாட்டார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறுவார் என்று ஊகம் தவறானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க இந்த செய்தியை மறுத்துள்ளார்.

முன்னதாக மூன்றாவது முறை

20ஆம் பக்கம் பார்க்க....

## சாவ.நகரசபை செயற்பாட்டில் இராணுவம் தலையிட முயற்சி

(யாழ்ப்பாணம்)

நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை பயன்படுத்தி சாவகச்சேரி நகர சபையின் செயற்பாட்டில் மூக்கை நுழைக்க முயற்சித்த இராணுவத் தரப்பினரை திருப்பியனுப்பியுள்ளார் சபையின் தவிசாளர் தேவசகாயம் பிள்ளை.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக 10-16 ஆம் திகதி வரையான ஒரு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகவும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் சாவகச்சேரி நகரசபைக்கு சென்ற இராணுவத்தினர் டெங்கு ஒழிப்பு வேலைகளில் தம்மை ஈடுபடுத்துமாறு கோரியுள்ளனர்.

இதேவேளை ஏற்கெனவே நகர

02ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாக். அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு எதிர்ப்பு

## உச்ச நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தமது நாட்டில் தஞ்சம் கோரியுள்ள பாகிஸ்தான், ஆப்கான் மற்றும் ஈரானியர்களை மீண்டும் திருப்பி அனுப்ப ஆரம்பித்திருப்பதை தடுக்குமாறு கோரி இலங்கை உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முதலில் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றம் இவர்களை நாடு கடத்த அனுமதி வழங்கியிருந்தபோதிலும், அவர்களில் சிலரை இலங்கை அரசாங்கம் விடுதலை செய்திருந்தது. அதனை அகதிகளின் சட்டத்தரணி முன்னதாக பாராட்டியும் இருந்தார். ஆனால், தற்போது இலங்கை அரசாங்கம் அந்த தஞ்சக் கோரிகளை மீண்டும் நாடுகடத்த தொடங்கியுள்ளது.

இதனையடுத்தே அகதிகளுக்கான சட்டத்தரணிகளால், அந்த நாடு கடத்தும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு இலங்கை உச்சநீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு செப்டெம்பர் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அகதிகளின் சார்பிலான சட்டத்தரணியான லக்ஷன் டயஸ் கூறியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கை பாதுகாப்பு அமைச்சுக்கும், ஐநாவின் அகதிகளுக்கான அமைப்புக்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்பட்டது என்றும் அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள குடிவரவுத் திணைக்களம் ஆட்களை தற்போதைக்கு நாடு கடத்தாது என்று உறுதி வழங்கப்பட்டது என்றும் கூறும லக்ஷன் டயஸ், ஆனால் அந்த வாக்குறுதி



மீறப்பட்டு அந்த உடன்பாடு ஏற்பட்டு சில தினங்களிலேயே குடிவரவு திணைக்களம் ஆட்களை சிறிது சிறிதாக நாடு கடத்தத் தொடங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இது சர்வதேச நியமங்களை மீறும் ஒரு செயலாகும் என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

இதன் காரணமாக யூ.என்.எச்.சி.ஆர் அவர்களை நாடு கடத்த வேண்டாம் என்று கோரும் தமது மூன்றாவது வலுவான கோரிக்கை கடிதத்தை வெளியிட்டுள்ளது என்றார் லக்ஷன் டயஸ்.

இந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை இங்கேயே தடுத்து வைப்பதற்கான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்வது தொடர்பில் அரசுக்கும், யூ.என்.எச்.சி.ஆருக்கும் இடையில் ஒரு இணக்கம் ஏற்பட்டால் சமூக அமைப்புக்களும் அதற்கு உதவ தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (செ-6)

# நாட்டைப் பிரித்து...

இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பேருந்து தரிப்பு நிலைய அங்குரார்ப்பண நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் முப்பது வருட காலமாக போர் நடைபெற்றதை இன்று பலர் மறந்துவிட்டார்கள். அந்தளவுக்கு இந்நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறார்கள். இன்று நாங்கள் அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் தொழில்நுட்ப உலகுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் எமது சந்ததியினரை தயார்படுத்தும் சீரிய எண்ணத்துடன் நாம் செயற்பட்டு வருகிறோம்.

நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தியை பலர் புதுமையாக பார்க்கின்றனர். எல்லா இடமும் காபட் பாதை போடப்படுகிறது. அதனை மக்களால் சாப்பிட முடியுமா என்று கிண்டலாக கேட்கின்றனர். எனினும் மக்கள் என்னிடம் என்ன கேட்கிறார்கள் தெரியுமா? இளையோர் என்னிடம் என்ன கேட்கிறார்கள் தெரியுமா? அவர்கள் கிராமங்களுக்குச் செல்ல காபட் பாதை கேட்கிறார்கள்.

நாட்டில் இன்று 96 சதவீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வருட இறுதிக்குள் மிகுதி 4 சதவீதமானோருக்கும் மின்சாரம் வழங்குவோம் என்பதை இந்நேரத்தில் உறுதியாக தெரிவிக்கிறேன்.

அதேபோல இலங்கையர்கள் அனைவருக்கும் குழாய் நீர் பெற்றுக் கொடுப்பதே எனது அடுத்த இலக்காகும். அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

நான் பொய் சொல்ல மாட்டேன். சொல்வதைச் செய்வேன். இலங்கையின் சனத்தொகை 20 மில்லியன் ஆகும். ஆனால் தொலைபேசிகளின் எண்ணிக்கை 27 மில்லியன் என்றால் நம்புவீர்களா? அதுதான் உண்மை. அவ்வாறெனின் நாம் புதிய தொழில்நுட்பத்தில், அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

நாம் ஆரம்பகாலங்களில் வாழ்ந்த வறிய வாழ்க்கை தற்போது மாறி வருகிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இன்று மனிதவுரிமையைப் பற்றி பேசும் வெளிநாட்டுக்காரர்கள் அன்று என்ன செய்தார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். கிராமத்தில் 14 வயதான சிறுவர்கள், அந்த வயதை ஒத்த இளைஞர்களை துன்புறுத்தினார்கள். அதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

நான் பௌத்தன் என்று சொல்வதற்கு பயப்பட மாட்டேன். சிங்களவன் என்று சொல்வதற்கும் பயப்பட மாட்டேன். ஆனால் பலருக்கு அப்படிச் சொல்வதற்குப் பயம் இருக்கிறது. நாம் பௌத்தர்கள்தான். ஆனால் ஏனைய மதத்தை மதிக்கும் பௌத்தர்கள்.

நான் ஜனாதிபதியாக ஆவதற்கு முன்னர் சிலருடைய பரப்புரை எப்படியிருந்தது தெரியுமா? அதாவது நான் ஆட்சிக்கு வந்தால் பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி ஒலிக்க விடமாட்டேன், மத சுதந்திரம் இருக்காது என்றெல்லாம பேசினார்கள். ஆனால் இன்று நாட்டில் எந்தளவுக்கு சுதந்திரம் இருக்கிறது என்பதை நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

இந்த நாடு ஜனநாயக நாடு இல்லை என வெளிநாடுகளில் பரப்புரை செய்கிறார்கள். நான் ஏகாதிபத்திய ஆட்சி செய்வதாக குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் நான் ஏகாதிபத்தியவாதியாக நடந்து கொள்வதில்லை. என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்காக எனது ஆட்சியை நான் பயன்படுத்துவது கிடையாது. அமைச்சர்வை இருக்கிறது. நாடாளுமன்றம் என்ற ஒன்று இருக்கிறது. அங்கு பேசப்படும், ஆராயப்படும் விடயங்களையே நான் செயற்படுத்துகிறேன்.

உலகை தீவிரவாதம் எந்தளவுக்கு ஆட்டிப்படைத்து வருகிறது என்பதை இன்று நாம் நன்கு அறிவோம். ஆனால் எமது நாட்டில் அது முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், எந்தவொரு சூழ்நிலையிலும் நாட்டை பிரிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்கமாட்டேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)

# தமிழ் ஆசிரியை ஒருவர் மர்மமான முறையில் கொலை

## சடலமும் மண்ணில் புதைப்பு

பசறை பிரதேசத்தை சேர்ந்த தமிழ் ஆசிரியை ஒருவரை மர்மமான முறையில் கொலை செய்து பசறை மீதும்பிட்டிய பிரதேசத்தில் உள்ள கோயில் ஒன்றுக்கு எதிரில் புதைத்த சம்பவம் குறித்து பொலிசார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக ஆசிரியையின் சடலம் இன்றைய தினம் தோண்டி எடுக்கப்பட உள்ளது என பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி பாடசாலைக்கு சென்றிருந்த ஆசிரியை வீடு திரும்பவில்லை என ஆசிரியையின் கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் ஆசிரியை கொலை செய்யப்பட்டு குறித்த கோயிலுக்கு எதிரில் புதைக்கப்பட்டுள்ளதை கண்டறிந்தனர்.

சடலத்தை நேற்று முன்தினம் தோண்ட பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் சட்ட வைத்திய அதிகாரியின் உதவியை பெற முடியாத காரணத்தினால் இன்றைய தினம் சடலத்தை தோண்டி எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செயயப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.(செ-6)

# ஈராக் மருத்துவமனை மீது அரசாங்கம் ஷெல் தாக்குதல்

(ஃபலுஜா)

ஈராக்கில் பெரும்பாலும் இஸ்லாமிய அரசு போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஃபலுஜா நகரில் உள்ள ஒரு மருத்துவமனை நேற்று முன்தினம் அரசாங்க படையினரின் ஷெல் தாக்குதலில் பாதிக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

அப்பாவி மக்களின் மரணத்தை தவிர்க்கும் வகையில், இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட நகரங்களில் உள்ள குடிமக்கள் பகுதிகள் மீது ஷெல் வீசுவதை நிறுத்துமாறு ஈராக்கின் புதிய பிரதமர் ஹைதர் அல் அபாதி உத்தரவிட்ட மறுதினம் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது.

அந்த மருத்துவமனையின் கட்டிடத்துக்கு சேதம் விளைவித்த அந்த ஷெல் தாக்குதலில் மருத்துவமனை ஊழியர் ஒருவரும் காயம் அடைந்ததாக ஃபலுஜாவில் உள்ள அந்த மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார். (செ-6)

# காணாமல் போனோர்...

எனினும் இதனை மீண்டும் ஏற்க மறுத்துள்ள இலங்கை அரசாங்கம், தமது ஆணைக்குழுவின் பணிகள் நிறைவடையும் வரையில் அந்த குழுவை அனுமதிப்பதில்லை எனவும், ஆணைக்குழுவின் பணிகள் முடிவடைந்ததும், அக்குழுவை நாட்டிற்குள் அனுமதிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக அமெரிக்காவின் ஆதரவில் கொண்டுவரப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஐ.நா விசாரணைக்குழுவினையும் இலங்கை அரசு நிராகரித்திருந்தது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐ.நா மனித உரிமை பேரவை அமர்வின் போது, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் பிரேரணை ஒன்று கடந்த வாரம் இலங்கைப் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாக, இலங்கை பிரதிநிதிகள் எடுத்துரைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-6)

# போர்க்குற்ற...

உரிமைச்சபையின் 27 ஆவது கூட்டத் தொடரிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

உண்மை, நீதி, ஒட்டுமொத்த மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல், தண்டித்தல் மற்றும் மீள நிகழாமல் தடுத்தல் ஆகிய விடயங்களுக்கான ஐ.நா மனித உரிமைச் சபையின் சிறப்பு ஏற்பாட்டாளர் (Special Rapporteur) DeGreiff அறிக்கை தொடர்பிலான விவாதத்திலேயே கரன் பார்கர் அம்மையார் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

போதிய கல்வியறிவு, மனித உரிமைகள் தொடர்பிலான தெளிவு போன்ற பல்வேறு நெறிமுறைகள் பற்றி அறியாதவர்களை, போர்க்களங்களுக்கு என திரட்டி களங்களுக்கு அனுப்புதல் உட்பட போர்க்குற்றங்களுடன் தொடர்புடைய கீழ்நிலைச் சிப்பாய்களை தண்டிப்பது என்பதற்கு அப்பால் சென்று, உத்தரவுகளை பிறப்பிக்கின்ற உயர்மட்டத்தில் உள்ளவர்கள் தண்டிக்கப்படும் போதுதான் பாரிய மனித உரிமை மீறல்கள் மீள நிகழாமல் தடுக்க முடியும் என்று கரன் பார்கர் அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் ஆட்சி பீடமேறிய ஒவ்வொரு அரசாங்கங்களையும் தலைமை தாங்கி நடத்தியவர்கள், ஈழத்தமிழினத்தின் மீது மேற கொண்ட இனப்படுகொலையினைத் தலைமை தாங்கியவர்கள் என்ற வகையில், இலங்கை அரசின் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி உடபட 12 பேருடைய பெயர்களை பட்டியலிட்டு, இனப்படுகொலையாளிகளாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச் சபை ஆணையாளர் அலுவலகம் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மனித உரிமைச்சபையில் கரன் பார்கர் அம்மையாரின் இக்கூற்று அதிக முக்கியத்துவம் பெறுகின்றது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-6)

# கடும் மழை...

த்தியாலமே வீசியுள்ளது.

இதனால் கரணவாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட இமையாணன் துவாடி அம்மன் கோவில் தேர்முட்டிக் கோபுரமும் அப்பகுதியிலுள்ள 10 இற்கும் மேற்பட்ட வீடுகளும் சேதமடைந்துள்ளன. (செ-6-60)

# சாவ.நகர...

சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஊடாக சில வேலைத் திட்டங்களையும் இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் இந் நடவடிக்கை குறித்து நகரசபையின் தவிசாளருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் இது குறித்து இராணுவத்தினரிடம் விளக்கம் கோரிய அதேவேளை நகரசபையின் செயற்பாட்டில் இராணுவத்தினர் தலையிடத் தேவையில்லை எனவும் சாவகச்சேரி நகரசபையில் போதியளவில் ஆளணியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; நகரசபையில்போதியளவு ஆளணியுள்ளது. எம்மிடம் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களைப் பயன்படுத்தியே கழிவகற்றும் நடவடிக்கையினை நகர சபை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்காலத்திலும் அந்த நடவடிக்கையினை நாம் தொடர்ந்து மேற்கொள்வோம். நகரசபையின் நடவடிக்கையில் இராணுவத் தலையீட்டை நாம் விரும்பவில்லை. அவ்வாறு இராணுவமும் தலையிட முடியாது. தலையிடவும் கூடாது.

போட்டோ எடுத்து பத்திரிகையில் பிரசுரித்து இராணுவம் நல்ல பெயர் எடுக்க நாம் இடம் கொடுக்க முடியாது. எம்முடைய பணிகளை நாம் மக்களுக்காக தொடர்ந்து முன்னெடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்தவுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை

## கத்தி பட தயாரிப்பாளர் விளக்கம்

லைக்கா புரொடக்ஷன்ஸ் பட நிறுவனம் தயாரிப்பில், இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸின் இயக்கத்தில் விஜய், சமந்தா ஜோடியாக நடிக்கும் "கத்தி" படம் தீபாவளிக்கு வெளியாகவிருக்கின்றது.

இந்நிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு லைக்கா நிறுவனத் தலைவர் நெருக்கமானவர் என்றும் எனவே படத்தை வெளியிடக்கூடாது என்றும் சில அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன. போராட்டங்களும் நடந்தன.

இது இவ்வாறிருக்க ஏ.ஆர்.முருகதாஸ் உள்ளிட்ட படக்குழுவினர் தமிழ் அமைப்பு தலைவர்களை சந்தித்தனர். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பட நிறுவனத்துக்கு எந்த தொடர்பும் இல்லை என்று விளக்கம் அளித்தனர். இதையடுத்து சீமான் உள்ளிட்ட பலர் "கத்தி" படத்துக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்த நிலையில் "கத்தி" பட சர்ச்சை குறித்து "லைக்கா" பட நிறுவனத் தலைவர் சுபாஷ்கான் பேட்டி அளித்தார்.

அவர், "கத்தி படத்தில் தமிழ் விரோத காட்சிகள் எதுவும் இல்லை. இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாக வரும் செய்திகளில் உண்மை இல்லை. எங்களுக்குள் எவ்வித தொழில் தொடர்பும் கிடையாது. நான் இலங்கையில் பிறந்து வளர்ந்தேன். பல வருடங்களுக்கு முன்பு இலங்கையை விட்டு வெளியேறினேன்.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த 27 வருடமாக தொழில் செய்து வருகிறேன். என் உறவினர்கள் பலர் இலங்கை ஜனாதிபதிக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டு உள்ளனர். எனவே "கத்தி" பட தயாரிப்பாளரான எனக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எந்த தொடர்பும் இல்லை"என்று தெரிவித்தார். (இ)

CIMA
Chartered Institute of Management Accountants
@ Wisdom
☎ 021 2220727 | 021 7200777

## பன்றி இறைச்சியுடன் முகாமையாளர் கைது

கினிகத்ஹேன பகுதியில் மூன்று நட்சதிர ஹோட்டல் ஒன்றில் இருந்து பன்றி இறைச்சி நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த ஹோட்டல் முகாமையாளர் இரத்தினபுரி - பலாபத்தல வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்காக மான் மற்றும் பன்றி இறைச்சிகள் இந்த ஹோட்டலில் வைக்கப்பட்டிருந்ததாக வழங்கப்பட்ட தகவலை அடுத்து இந்த சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது 10 கிலோ பன்றி இறைச்சி மற்றும் இறைச்சியை களஞ்சியப்படுத்தி வைக்க பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவினில் கைது

(கொழும்பு)

இலங்கையை சேர்ந்த 10 மீன வர்கள், தமிழக கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இந்திய கடலோர காவற் படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களின் இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.


சென்னையிலிருந்து வடகிழ க்காக 70 மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பத்து மீனவ ர்களும் கைது செய்யப்பட்டதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.இந்திய பிரத்தியேக பொரு ளாதார மண்டலத்தில் அத்துமீறி பிரவேசித்து மீனவர்கள் பிடித்த 4 ஆயிரத்து 200 கிலோ எடை உள்ள டூனா மீன்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்திய பெருங்கடலின் கிழக்கு பகுதியில் சந்தேகப்படும்படி யாரா வது நடமாடுகிறார்களா? என கடற் படையினர் தீவிரமாக ரோந்து சுற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

அதேபோல் கடலில் தத்தளிக்கும் மீனவர்களுக்கு உதவும் வகையிலும் இந்த ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (இ)

# நாடகம் என்று அப்போதே கூறினேன்

## கலைஞர் கருணாநிதி



இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் 72 படகுகளை மீட்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம், இந்திய மத்திய அரசு நேரடியாகப் பேச வேண்டும் என திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழக அரசியல் கட்சிகள் மீண்டும் மீண்டும் குரல் கொடுத்தபோதும் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது நின்றபாடில்லை.

தமிழக மீனவர்களை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்து விட்டேன் என சில நாட்களுக்கு முன்பு இலங்கை ஜனாதிபதி தெரிவித்தார். அப்போதே அதனை ஏமாற்று நாடகம் என நான் கூறியிருந்தேன்.

அதை உண்மையாக்கும் விதத்தில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து வருகிறது.

நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம், நாகையைச் சேர்ந்த 53 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து 78 மீனவர்கள் இலங்கைச் சிறையில் உள்ளனர். தமிழக மீனவர்களின் 72 படகுகளும் அங்குள்ளன.

மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகப் பேசி மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கருணாநிதி வலியுறுத்தியுள்ளார். (இ)

# குருநகரில் இறங்குதுறை அமைக்கும் வேலைத்திட்டம் டிசெம்பரில் ஆரம்பம்

குருநகர் மீன்பிடி இறங்குதுறை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள பிரதி பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த இறங்குதுறையானது, கடற்றொழில் சார்ந்த வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் 2010 ஆம் ஆண்டு மேற்கொள்வதற்கான முனைப்புகள் ஏற்படுத்தப்பட்ட போதும், பல தடங்கல்களால் அந்நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது.

இந்நிலையில், கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் பணிப்பின் பேரில், இறங்குதுறை பகுதியை ஆய்வு செய்வதற்கான சுற்றுச்சூழல் நிபுணர் குழு, நேற்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் பகுதிக்கு விஜயம் செய்து அந்தப் பகுதியை பார்வையிட்டது.

இறங்குதுறை அமைப்பதற்கான இடத்தை பார்வையிடுவதால், மற்றும் இறங்குதுறை அமைப்பதற்கான இறுதி ஆய்வு அறிக்கையை தயாரித்தல் ஆகிய நோக்கங்களுக்காகவும், இறங்குதுறை அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் ஏற்படுமா என்பது தொடர்பில் ஆய்வு செய்வதற்காகவும் இந்த குழு வருகை தந்திருந்ததாக கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த இறங்குதுறை எத்தனை மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பது தொடர்பாக விபரங்கள் இன்னமும் தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# இராசி பலன்

15.09.2014
(ஆவணி 30, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சப்தமி முன்னிரவு 11.46 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.42 மணிவரை
இராகுகாலம் -7.33-9.03 மணிவரை
சுபநேரம் - 12.03-1.33 மணிவரை

வளவன்

**மீனம்**: சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் கிடைக்கும், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், பிரயாண சுகமுண்டு, சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**மேடம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழும் வாய்ப்புண்டு, துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**இடபம்**: தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியத்தில் மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், பல நாட்களாக சந்திக்காமலிருந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்**: செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், வாகன சுகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் காட்டுவீர்கள், எடுத்த கருமங்கள் நிறைவேற அதிக பிரயாசை எடுப்பீர்கள்.

**கடகம்**: அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொழில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**மகரம்**: மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு**: இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தடைகள் அகன்று காரியம் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**விருச்சிகம்**: பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும் நாள், நண்பர்கள் நலனுக்காக செலவுகள் ஏற்படலாம், [illegible] பக்கள் உங்களிடமே வந்து சேரும், களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்**: அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கன்னி**: தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், ஆன்றோர் சந்திப்புண்டு, திடீர் பயணங்களால் ஆதாயமுண்டு, தடைப்பட்ட காரியங்களை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமர்ஷல் வங்கியின் 600ஆவது ஏரிஎம்



கொமர்ஷல் வங்கி இலங்கையில் 600வது ATM இயந்திரத்தை தொடக்கிவைத்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் கொழும்பு கோல்ட் சென டரில் இந்தப் புதிய கிளையை அண்மையில் திறந்து வைத்தனர்.

முன்னாள் சென் ஜோன்ஸ் மீன் சந்தை தற்போது மீளப் புனரமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள கொழும்பு கோல்ட் சென்டரில் கீழ் மாடியில் அமைந்துள்ள வங்கியின் 238-வது கிளையிலேயே ATM இயந்திரமும் அமைந்துள்ளது.

இந்த புதிய கோல்ட் சென்டரில் தங்க விற்பனைக்காக சில்லறைக் கடைகளைத் திறந்துள்ள வர்த்தகர்களுக்கும் இங்கு வருகைதரும் வாடிக்கையாளர்களுக்கும் இந்த வங்கிக் கிளையும் அதனோடு இணைந்த ATM இயந்திரமும் பெரும் பலன் மிக்கதாக அமையும் என்று வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம் கூறினார்.

ATM இயந்திர வலையமைப்பின் மூலம் பணத்தைமீளப் பெறுவதற்கு மேலதிகமாக நீர், மின்சார பாவனை பட்டியல் கட்டணம், டயலொக், மொபிடெல், எடிசலாட், ஹட்ச் மற்றும் லங்காபெல் வலையமைப்புக்களின் கட்டணம், கொமரஷல் வங்கி கிரடிட் கார்ட் கட்டணம் என்பனவற்றை வருடம் 365 நாட்களும் 24 மணிநேரமும் செலுத்தக்கூடிய வசதிகளும் இதில் உள்ளன. மேலும் வங்கியின் இந்த வலையமைப்பானது உலகில் உள்ள மில்லியன்கணக்கான ATM இயந்திர வலையமைப்புடனும் இணைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர வங்கியின் ATM வலையமைப்பானது மாஸ்டர் கார்ட், மெஸ்ட்ரோ, சிரஸ், விஸா, பிளஸ், எமெக்ஸ், டிஸ்கவர் மற்றும் டின்னர்ஸ் கிளப் என்பனவற்றோடும் தொடர்புடையதாகும்.

இதன் மூலம் வெளிநாடுகளில் இருந்துவரும் உல்லாசப் பயணிகளுக்கும் இந்த வலையமைப்பு இயந்திரங்களைப் பாவித்து தமது நாட்டு கணக்கில் இருந்து உள்நாட்டில் பணத்தைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

# தங்கத்தின் விலை வீழ்ச்சி

இலங்கையில் கடந்த ஒரு வருட காலத்தில் மிகக் குறைந்த தங்க விலை கடந்த வாரம் பதிவானது.

கடந்த 6 மாதங்களில் உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 89 அமெரிக்க டொலரினால வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.


2012ஆம் ஆண்டு உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1800 அமெரிக்க டொலர் வரை உயர்வடைந்திருந்தது.

2013-ம் ஆண்டில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1200 அமெரிக்க டொலர் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் 6 மாத காலத்திற்குள் உலக சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1400 அமெரிக்க டொலர்வரை வீழ்ச்சியடைந்துள்ளதுடன், கடந்த மாதத்தில் மாத்திரம் 55 அமெரிக்க டொலர் வரை வீழ்ச்சி கண்டுள்ளது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை குறைவடைந்துள்ள விதத்திலேயே இலங்கையிலும் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

# இலங்கை வங்கியின் உதவியுடன் யாழ்.ரயில் நிலையம் புனரமைப்பு





யாழ்ப்பாணம் புகையிரத நிலையப் பணிகளுக்காக 85 மில்லியன் ரூபாய் நிதியை இலங்கை வங்கி வழங்கியுள்ளது.

இலங்கை வங்கியின் தலைவரும் முன்னாள் விமானப் படைத் தளபதியுமான எயார்சீப்மார்ஷல்ஹர்ஷ அபயவிக்கிரம இது குறித்து தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை புனர்நிர்மாணம் செய்யும் பொறுப்பையும் அதற்கான முழு நிதியையும் இலங்கை வங்கி பொறுப்பேற்றுள்ளது.

யுத்த காலத்தில் அழிந்துபோன யாழ்.புகையிரத நிலையத்தை புனர்நிர்மாணம் செய்து மக்கள் பாவனைக்காக வழங்குவதில் இலங்கை வங்கி பெருமை கொள்கிறது.

அத்துடன் இந்த ரயில் நிலையத்தில் இலங்கை வங்கி தனது சிறிய கிளையொன்றை அமைக்கவுள்ளதுடன் ஏரிஎம் இயந்திரமொன்றையும் நிறுவவுள்ளது.

பழைய பாரம்பரிய வடிவமைப்பு முறைகள் மாற்றம் பெறாமல் ரயில் தள வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது என்றார்.

# சட்டவிரோத தங்குமிட வசதியால் ஹோட்டல்கள் பாதிப்பு

வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் தொடர் மனைகள் செயற்பட்டு வருகின்றமையானது இலங்கையின் சுற்றுலாத்துறையில் பெரும்பிரச்சினையாக தற்காலத்தில் மாறியுள்ளது. இந்த செயற்பாடுகளின் காரணமாக ஹோட்டல்களின் வியாபாரத்தில் பெருமளவு சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பிலும் தெற்கு பகுதிகளிலும் புதிதாக நிர்மாணிக்கப்படும் தொடர்மனைகள் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்த விலையில் தங்குமிட வசதிகளை வழங்குகின்றமை காரணமாக, ஹோட்டல்துறை பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இந்த தொடர்மனைகள் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிட வசதிகளாக இயங்குவதற்கு போதியளவு அனுமதிகளை கொண்டிருப்பதில்லை. இதன் காரணமாக இவை அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்துவதுமில்லை.

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு போதியளவு சட்ட விதிமுறைகள் இல்லாத நிலையில், தற்போது நிலவும் சூழ்நிலையை ஆராய்ந்து எதிர்காலத்தில் இந்த விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த அரசு கவனம் செலுத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இயற்கை சூழலுடன் அலுவலகங்கள் வேலைத்திறன் அதிகரிப்பு





அலுவலகங்களில் செடிகளுடன் கூடிய இயற்கை சூழலால் பணியாளர்களின் வேலைத்திறன் 15 சத வீதம் அதிகரிக்கும் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. இது குறித்து குயின்ஸ்லாண்ட் பல்கலைகழக ஆராய்ச்சியாளர் பேராசிரியர் அலெக்ஸ் ஹஸ்லம், கார்டிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். அதற்காக 2 பெரிய அலுவலகங்களில் பணியாற்றுபவர்களின் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு செய்தார். 2 மாதங்கள் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், 'செடிகள் உள்ளிட்ட இயற்கை சூழலுடன் அமைந்துள்ள அலுவலகத்தில் பணியாற்றுபவர்களின் வேலை திறன் 15 சதவீதம் அதிகரிக்கிறது' எனத் தெரியவந்தது.

மேலும், இந்த ஆய்வு குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், 'இயற்கை சூழலுடன் வேலை செய்பவர்கள் தங்களது நிர்வாகத்தின் மீது அதிக நம்பிக்கையுடனும், கூடுதல் மகிழ்ச்சியுடனும் இருக்கிறார்கள். இவர்கள் மனரீதியாக மிகுந்த ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் பணியாற்றுகின்றனர். [illegible] தங்களது பணியாளர்களை அதிக செலவு செய்து பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக அனுப்புகின்றன. அத்தோடு இது போன்ற இயற்கை சூழலை தங்களது அலுவலகங்களில் அமைக்க முயற்சி செய்யலாம்' என்றனர்.

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு

ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் கடந்த ஆண்டு பதிவாகியிருந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 13.8 வீதத்தால் அதிகரித்து 140,319 ஆக பதிவாகியிருந்தது என சுற்றுலா ஊக்குவிப்பு அலுவலகம் அறிவித்துள்ளது. நடப்பு ஆண்டின் முதல் 8 மாதங்களின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 23 வீதத்தால் அதிகரித்து 1,001,643 ஆக பதிவாகியிருந்தது. 2014-ம் ஆண்டின் நிறைவில் 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை எய்துவதை இலங்கை இலக்காக கொண்டுள்ளது.





# 4000 புள்ளிகளை கடந்தது

கொழும்பு பங்குச்சந்தையின் S&P SL 20 சுட்டி அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து முதல் தடவையாக 4000 புள்ளிகளை கடந்த வாரம் கடந்திருந்தது. 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அறிமுகம் செய்யப்பட்டிருந்த இந்த சுட்டி, நடப்பு ஆண்டின் செப்டெம்பர் 11 ஆம் திகதி வரை 23 வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

வெளிப்படையானதும் தொடர்ச்சியானதுமான பெறுபேறுகளை முதலீட்டாளர்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச தரங்களுக்கு அமைவாக இந்த சுட்டி தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சுட்டியில் அடங்கியுள்ள நிறுவனங்கள்: எயிட்கன் ஸ்பென்ஸ் பிஎல்சி, ஏசியன் ஹோட்டல்ஸ் அன்ட் புறொப்பர்டீஸ் பிஎல்சி, புக்கிட் தாரா பிஎல்சி, சிரி ஹோல்டிங்ஸ் பிஎல்சி, கார்கில்ஸ் சிலோன் பிஎல்சி, கார்சன்ஸ் கம்பர்பெட்ச் பிஎல்சி, சிலோன் டொபாக்கோ கம்பனி பிஎல்சி, செவ்றொன் லுப்ரிகன்ட்ஸ் பிஎல்சி, கொமர்ஷல் வங்கி பிஎல்சி, டிஎஃப்சிசி வங்கி, டயலொக் ஆக்சியாடா பிஎல்சி, டிஸ்டிலரீஸ் கம்பனி பிஎல்சி, ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி, ஹேலீஸ் பிஎல்சி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, லங்கா ஓரிக்ஸ் லீசிங் பிஎல்சி, லயன் பிரெவரி சிலோன் பிஎல்சி, நஷனல் டிவலப்மன்ட் வங்கி பிஎல்சி, நெஸ்லே லங்கா பிஎல்சி மற்றும் சம்பத் வங்கி பிஎல்சி ஆகும்.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,087.41 | 7,218.68 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,932.81 | 4015.63 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 11,400.775

[illegible] ஹெல்சி(39.00),ரீ சிமோல் ஹோல்டர்(48.20),எஸ்.எம்.பி. லீசிங்(X)(0.60),பென்சி ரெசோட்ஸ்(12.20),பரஹன்(750.00).

[illegible] லங்கா சென்சரி(W) (0.70),ஓரியன்ட் கா[illegible], ஜிஎஸ்பினான்ஸ்(36.20),சிரஸ் லிசர்(W)(2.50),சிங்கபுத்திர பி[illegible]

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.81 | 131.68 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.44 | 214.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 165.47 | 170.92 |
| சுவிஸ் பிராங் | 136.66 | 141.64 |
| கனேடிய டொலர் | 115.94 | 119.86 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.91 | 120.30 |
| சிங்கப்பூர் டொலர் | 101.29 | 104.63 |
| ஜப்பான் யென் | 1.19 | 1.23 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை | 2.13 |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை | 35.46 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 51 பேர் கைது

ஊவா மாகாண சபைத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 51 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுவரை ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் 65 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.பெரும்பாலும் சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் தொடர பிலேயே முறையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை ஊவா தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் 223 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் செயலகம் கூறியுள்ளது. (இ)


### முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்களுக்கான அறிவித்தல்

2014.09.15 இலிருந்து 1 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் தங்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஏனைய இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் வழமைபோல் நடைபெறும். (8506)

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.



### கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

2014.09.15 இலிருந்து முதலாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான (சட்டத்துறை மற்றும் இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்கள் தவிர) விரிவுரைகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். ஏனைய இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் வழமைபோல் நடைபெறும். (சி-8505)

பீடாதிபதி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.


# சிறந்த வெளிநாட்டுக் கொள்கை இலங். அரசாங்கத்திடம் இல்லை



(கொழும்பு)

இலங்கையிடம் சிறந்த வெளிநாட்டுக் கொள்கை இல்லாமையே சர்வதேச ரீதியில் தோல்விக்கு மேல் தோல்வியை சந்திப்பதற்கு பிரதான காரணம் என முன்னாள் வெளிநாட்டு இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள விசேட நேர்காணல் ஒன்றிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக ஐ.நா. ஜெனீவா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தொடராக கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் தோல்வியடைவதற்கு தகுதியில்லாத வெளிநாட்டுத் தூதுவர்கள் நியமிக்கப்படுவது ஒரு காரணம் மட்டுமே.

இதுபோன்ற பல காரணங்கள் உள்ளன. சரியானதோ, பிழையானதோ பரவாயில்லை. சர்வதேச விவகாரம் தொடர்பிலான வியூகம் ஒன்று இருக்க வேண்டும்.

வெளிநாட்டுக் கொள்கையொன்று இருக்க வேண்டும். இந்த இரண்டும் ஆய்வின் அடிப்படையிலேயே அமையப் பெற வேண்டும். அவ்வாறானதொரு ஆய்வொன்று இருப்பதாக தென்படவில்லை.

இலங்கைக்கு வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் சரியான பார்வையொன்று இல்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

## இரு இலங்கையர்கள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

வடக்கு ஐக்கிய அரபு இராச்சிய த்தில் இரண்டு இலங்கையர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 23 வயதான இலங்கையர் ஒருவர் ஹோட்டல் நீர்த்தடாகத்தில் நண்பர்களுடன் கடந்த வெள்ளிக் கிழமை நள்ளிரவில் நீந்திக் கொண் டிருந்ததாகவும், பின்னர் அவரது நண்பர்கள் தங்கள் அறைகளுக்கு சென்று விட்டதாகவும் தெரிகிறது. இந்நிலையில் அவரது உடல் மறுநாள் காலை நீச்சல் தடாகத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு 20 வயதான இலங்கையர் கடற்கரையில் நீந்திக்கொண்டிருந்த போது, நீரில் மூழ்கியுள்ளார். பின்னர் அவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## துப்பாக்கி வைத்திருந்த நபர் புலனாய்வு பிரிவினரால் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் பயாகல புகையிரதப் பாதைக்கு அருகில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேகநபர் வசமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் இரண்டு ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.மேலும் இவர பயாகல பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவர் எனத் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ களஞ்சிய காப்பாளர் (டோகா)<br>தொ.இ: B/3572 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 1.25<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MSC/ பொறியியலாளர்<br>தொ.இ: G/2748 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 12 3/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L:<br>தொ.இ: B/3573 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 30 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, வங்கி உதவியாளர்<br>தொ.இ: G/2752 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 54 செவ் 7 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர் (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/3576 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 7<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: G/2756 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ உதவி முகாமையாளர்<br>தொ.இ: B/3577 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 31 1/2 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/2757 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com



சேவை நலன் பாராட்டு

யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்

திருமதி நந்தாதேவி மகேந்திரராஜா (பயிற்றப்பட்ட கணிதம்)



யா/ நாரந்தனை கணேசா வித்தியாசாலை- 03.09.1979-30.01.1983
பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைஆசிரியர் பயிற்சி-31.01.1983-31.12.1984
அலிகார் மகா வித்தியாலயம்- 01.01.1985-31.12.1985
சென் லூசியஸ் RCTMS- 01.01.1986-30.04.1991
யா/ சென்ற் ஆன்ஸ்- 01.05.1991-04.03.1998
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்-05.03.1998-15.09.2014

எமது பாடசாலையில் சேவையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் திருமதி ந.மகேந்திரராஜா ஆசிரியை அவர்களின் ஓய்வுக் காலம் மகிழ்வுடன் அமைய வாழ்த்துகின்றோம்.

யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(7791)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசாங்க தரப்பினர் மக்களின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

அரசாங்கம் மக்கள் மீது உள வியல் ரீதியான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமைக் காரியால யத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

உளவியல் ரீதியான ஆய்வு களின் பின்னர், அரசாங்கம் இவ் வாறு மக்கள் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

டிபென்டர் ரக வாகனங்கள் மற்றும் குண்டர்களை பயன்படுத்தி ஊவாவில் பதற்ற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. மக்களை பீதிக்குள்ளாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாக அமை ந்துள்ளது.

மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு சென்று சுயாதீனமாக வாக்களிப் பதனை தடுத்து நிறுத்த அரசா ங்கம் முயற்சிக்கின்றது. அரசாங்க த்தின் இந்த அடக்குமுறைகளை முறியடிப்பது மக்களின் கடமை யாகும்.

ஊவா மாகாணத்தில் அரசா ங்கம் பிரயோகித்து வரும் அடக்கு முறைகளை, எதிர்வரும் ஜனா திபதி தேர்தலிலும் பயன்படுத்தக் கூடிய சாத்தியங்கள் காணப்படு கின்றன என அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (இ)

# வாகன விபத்தில் தாயும் மகனும் பலி;

ரன்தெனியவில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் மற்றும் மகன் உயிரிழந்ததுடன், பிறந்து இரண்டு நாட்களான சிசு உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் சிரிகல வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

எல்ல- வெல்லவாய பாதையில், முச்சக்கரவண்டியொன்றுடன் வான் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கியோர் ஹாலி-எலயை சேர்ந்தவர்களாவர். அவ்விட த்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த வானின் சாரதியை கைது செய்துள்ளதுடன், அவரை வெல்லவாய நீதிமன்ற நீதவான் முன்னி லையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.(இ)

# சிறைக் கைதிகளினது தரவுகள் கணனிமயப்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

நாட்டில் உள்ள சிறைக்கை திகள் தொடர்பிலான தகவல்கள் கணனிமயப்படுத்தப்பட உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் பற்றிய பூரண விபரங்கள் திரட்டப் பட்டு அவற்றை பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கைதிகளின் கைவி ரல் அடையாளங்கள், புகைப்பட ங்கள், குற்றத்தின் தன்மை, தண் டனை போன்ற விபரங்கள் திரட்ட ப்படவுள்ளன.

அடுத்த ஆண்டு முதல் இந்த தகவல்களை திரட்டி பேணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சிறைச்சாலையிலிரு ந்து ஏனைய சிறைச்சாலைகளுடன் தொடர்புகளைப் பேணக்கூடிய வகையில் இந்த வலையமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

29 சிறைச்சாலைகள் இவ்வாறு ஒரே வலையமைப்பின்கீழ்கொணடு வரப்படவுள்ளன.

இதன் மூலம் சுமார் 22 ஆயி ரம் கைதிகள் பற்றிய தகவல்கள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (இ)

# குழந்தைகளை விற்கும் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

குழந்தைகளை விற்பனை செய்து வருவதாக குற்றம் சாட்டப்படும் 24 வயதான யுவதியொருவரை கைது செய்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பங்கதெனிய பிரதேச த்தைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி அண்மையில் இரணடு குழந்தைகளை விற்பனை செய்துள்ளதாகவும் அதிலொன்று பிறந்து 7 நாட்களேயான சிசு என் றும் பொலிஸார் தெரிவித்தனர்.


எனினும், கைது செய்யப்பட்ட அந்த யுவதி, தான் குழந்தைகளை விற்பனை செய்பவர் இல்லை என்றும் பொலிஸாரிடம் தெரி வித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 50 | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 45 | 60 |
| கோவா | 60 | 60 | 70 | 70 |
| கரட் | 70 | 50 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 80 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 60 | 120 |
| பயற்றங்காய் | 30 | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 80 |
| கறிமிளகாய் | 90 | 100 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 50 | 80 |
| போஞ்சி | 100 | 120 | — | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 136

டொறின் மன்மதநாயகம்




ரோஜா சிவா




கோகிலன் கோபி




செல்வன் சாது




ரி. லக்ஸ்மன்




நிதர்ஷ் சன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தும்பளை கடற்கரையில் நேற்று ஆணொருவரின் சடலம் ஒதுங்கியது

(பருத்தித்துறை)

யாழ்.தும்பளை கிழக்கு மூர்க்கம் கடற்கரையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

உடலில் ஆடைகள் எதுவுமற்ற நிலையிலேயே சடலம் கரையொதுங்கியுள்ளதாகவும் முகத்தில் காயங்களுடன் சடலம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவருடைய சடலம் என்றும் பொலிஸார் குறிப்பிட்ட னர்.

சடலம் மதியம் ஒருமணிவரை அடையாளம் காணப்படாத நிலையில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி நேரில் சென்று மரண விசாரணையை மேற்கொண்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஊர்காவற்றுறை மண்கும்பான் பகுதியில் கரையொதுங்கிய சடலம் இந்தியா இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த மீனவரான எம்.ஞானப்பிரகாசம் என்பவருடையது என அடையாளங்காணப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். (இ-10-19-60)




# சிங்கள மாணவன் மீது யாழில் கடும்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிங்கள பாடசாலை மாணவனொருவரை தமிழ் மாணவர்கள் தாக்கிய சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிங்கள மாணவன் தமிழ் மாணவர்களினை சிங்கள மொழியில் கடும் தொனியில் பேசியதால் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் வத்தனை கருணாகர பௌத்த மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவனொருவனே காயமடைந்துள்ளான்.

யாழ்.நகரில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கென குறித்த தென்பகுதி பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் வருகை தந்துள்ளனர்.

இதன்போது அங்கு நின்ற தமிழ் மாணவர்களுடன் குறித்த சிங்கள மாணவன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட அங்கு தமிழ் மாணவர்கள் குறித்த மாணவனைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான மாணவனின் பாடசாலை பொறுப்பாசிரியர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் இது தொடர்பில் தாம் விசாரணைகளினை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-4)




# எட்டு வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

8 வயது சிறுமியொருவரினை 68 வயதுடைய முதியவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளார். இச்சம்பவம் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் நாவாந்துறையில் இடம்பெற்றுள்ளது.

இம் முதியவருக்கு எதிராக சிறுமியின் பெற்றோர்கள் யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளனர்.

வீட்டில் யாருமற்ற வேளை குறித்த சிறுமியை இனிப்புக்கள் வாங்கி தருவதாக கூறி அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி வந்துள்ளார்.

இது தொடர்பில் சிறுமியின் பெற்றோர்களிற்கு தெரியவரவே சிறுமியின் பெற்றோர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர்.

சிறுமியினை வைத்திய பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் குறித்த முதியவரை கைது செய்யும் நடவடிக்கைகளினை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)


## ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் உள்ள ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நகரசபை கேட்போர் கூடத்தில் நகர சபையின் தலைவர் சபாரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதன்போது பருத்தித்துறை நகரின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே வடமராட்சியில் உள்ள அனைத்து ஊடகவியலாளர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை நகராட்சி மன்றச் செயலாளர் ந.செவ்வேள் அறிவித்துள்ளார். (இ-10)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராசா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# குடிநீர் விநியோகம் தொடர்பாக யாழில் விசேட கலந்துரையாடல்

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் தென்மராட்சி வேம்பிராய் ஆகிய பகுதிகளில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் குடிநீர் விநியோகத்திட்டம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது வடமராட்சியின் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் நீர் விநியோகத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதன்பிரகாரம் வல்வெட்டித்துறையில் ஆயிரம் குடும்பங்களுக்கு நீர் விநியோக இணைப்பு வழங்கக் கூடியதாக இருந்தபோதிலும் இதுவரையில் 150 குடும்பங்களுக்கு மட்டுமே இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பருத்தித்துறையில் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு இணைப்பு வழங்கக்கூடியதாக உள்ளபோதிலும் இதுவரையில் 20 குடும்பங்களுக்கு மட்டுமே இணைப்பு வழங்கப்பட்டது.

இதனிடையே கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் குடிநீர் விநியோகத் திட்டம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதேபோன்று மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் குறித்த சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோக திட்டத்தின்போது பொது மக்கள் எதிர் நோக்கி வருகின்ற இடர்பாடுகள், பிரச்சினைகள் மற்றும் மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் பொது மக்களினதும் துறைசார்ந்த அரச அதிகாரிகளினதும் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட துறைசார்ந்தோர் கலந்து கொண்டிருந்தனர். (இ)

# ஜாம்பவான் அகப்பட்டான்

திருடர்களின் ஜாம்பவான் என அழைக்கப்பட்ட நபரினை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த நபர் 30 இற்கும் மேற்பட்ட திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்ததோடு அவற்றில் 19 திருட்டுச் சம்பவங்கள் கைவிரல் அடையாளத்துடன் நிரூபிக்கப்ட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தனது கைவரிசையினை காட்டி வந்துள்ளார். வீட்டுடைப்பு, சங்கிலி அறுப்பு போன்ற பல்வேறு வகையான திருட்டுச் செயல்களில் பிரஸ்தாப நபர் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதுவரை 30 இற்கு மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த இந்நபர் சுமார் 3 வருடங்களிற்கு மேலாக பொலிஸாரின் கண்களில் அகப்படாமல் தப்பித்தும் வந்துள்ளார். இவருக்கெதிராக 19 திருட்டுச் சம்பவங்களில் கைவிரல் அடையாள சான்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் யாழ்.பொலிஸாரின் புலனாய்வுப்பிரிவு குறித்த நபரினை அண்மைக்காலமாக தீவிரமாக தேடிவந்த நிலையில் முல்லைத்தீவிற்கு சென்று மறைந்துள்ளார்.


இந்நிலையில் யாழ்.பொலிஸார் வழங்கிய தகவலினையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் குறித்த நபரினை கைது செய்துள்ளனர். இதேவேளை குறித்த நபரின் மனைவியும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

923






# சுட்டி மனசு

எனக்கு சுட்டி ரீ.வி. பார்க்க ரொம்பப் பிடிக்கும். அதிலும் வருத்தப் படாத கரடிகள் சங்கம் ஹார்டூன் விரும்பிப் பார்ப்பேன். ஆனா படிப்பு கெட்டுப்போய்விடும் என்று அம்மா, அப்பா அதிகம் பார்க்க விடுறாங்க இல்ல. இருந்தாலும் நான் வகுப்பில ஆரம்பத்தில வாங்கின மார்க்கை விட அதிகம் வாங்கியிருக்கன். நான் சுட்டி ரீ.வி. விரும்பிப் பார்க்கிறது தப்பா? ப்ளீஸ்.....!!!

ஆர்.உதிஸ்ரன்
தரம்-03
யாழ்/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.



கல்வியங்காடு, கட்டப்பிராய் எனும் குக்கிராமத்திலே நான் வசித்து வந்தேன். (லதுசன்) எனக்கு நாய்க்குட்டி என்றால் விருப்பம். எனது வீட்டில் அழகான ஓர் நாய்க்குட்டி இருந்தது. அதை நான் மிக நன்றாக வளர்த்தேன். நான் பாடசாலைக்கு போய் வந்தாப் பிறகு அதனைக் கொஞ்சி விளையாடுவேன் எனது நண்பர்களும் என்னுடன் சேர்ந்து விளையாடுவார்கள். அன்று ஒரு நாள் நான் பாடசாலைக்குப் போய்விட்டேன். எனது நண்பி நாய்க்குட்டியோடு விளையாடும் போது அந்நாய்க்குட்டி தவறுதலாக வீதிக்குச் சென்றுவிட்டது.

இந்த நாய்க்குட்டி பயத்தால் நண்பியிடம் வரும்போது ஒரு மோட்டார் வண்டியுடன் மோதி அவ் இடத்திலேயே இறந்துவிட்டது. அதைப் பார்த்த என் நண்பி அதைத் தூக்கிக்கொண்டு வீட்டில் வைத்து அழுதுகொண்டு இருந்தாள். நான் பாடசாலைவிட்டு சந்தோசமாக எனது நண்பர்களுடன் வந்தேன். எனது நாய்க்குட்டியை எங்கும் தேடிப் பாரத்தேன். நாய்க்குட்டியைக் காணவில்லை. நான் பதற்றமாக தேடி நண்பியிடம் கேட்டேன். நண்பி அழுதுகொண்டே சென்னாள்: எமது நாய்க்குட்டி தவறுதலாக வாகனத்தில் மோதி இறந்துவிட்டது என்று.

நான் அழுதுகொண்டே வீடு சென்றேன். நான் வீட்டில் சரியாக சாப்பிடுவதில்லை. எனது நண்பர்களுடன் விளையாடுவதில்லை. இதைப் பார்த்த நண்பி ஒரு நாய்க்குட்டி வாங்கி எனக்கு பரிசு அழித்தாள். நான் சந்தோசமாக நண்பியைக் கட்டி அணைத்தேன். அன்றுமுதல் நாய்க்குட்டியை கவனமாகவும் அன்பாகவும் வளர்த்தேன். எனது நண்பர்களுடனும் நன்றாக விளையாடினேன்!

விஜயகுமார். லதுசன்
தரம்-12
யாழ்/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## 09.2014 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1556 - புனித உரோமப் பேரரசின் முன்னாள் பேரரசன் ஐந்தாம் சார்ல்ஸ் ஸ்பெயின் திரும்பினான்.
- 1812 - நெப்போலியன் பொனபார்ட் தலைமையில் பிரெஞ்சுப் படைகள் மொஸ்கோவில் கிரெம்ளின் மாளிகையை அடைந்தனர்.
- 1821 - ஸ்பெயினிடமிருந்து கொஸ்டா ரிக்கா, எல் சல்வடோர், குவாத்தமாலா, ஹொண்டுராஸ், நிக்கராகுவா ஆகியன கூட்டாக விடுதலையை அறிவித்தன.
- 1835-சார்ள்ஸ் டார்வின் கடல் வழியே காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் வேர்ஜீனியாவின் ஹார்ப்பர்ஸ் துறையைக் கைப்பற்றினர்.
- 1873 - பிரெஞ்சு-புருசியப் போர்: கடைசி ஜேர்மானியப் படையினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: சோம் என்ற இடத்தில் முதற்தடவையாக தாங்கிகள் போரில் ஈடுபடுத்தப்பட்டன.
- 1935 - ஜேர்மனியில் யூதர்களுக்கு குடியுரிமை சட்டபூர்வமாக மறுக்கப்பட்டது.
- 1935 - நாசி ஜேர்மனி சுவாஸ்டிக்காவுடன் கூடிய புதிய கொடியை அறிமுகப்படுத்தியது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவில் பெரும் எண்ணிக்கையான ஜேர்மனிய வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போர் தொடர்பான நிலபபாட்டை எடுப்பதற்காக பிராங்கிளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சேர்ச்சில் ஆகியோர் இரண்டாம் தடவையாக கியூபெக் நகரில் சந்தித்தனர்.
- 1945 - தெற்கு புளோரிடாவிலும் பகாமசிலும் சூறாவளி காரணமாக 366 விமானங்கள் சேதமடைந்தன.
- 1950 - கொரியப் போர்: அமெரிக்கப் படைகள் கொரியாவில் தரையிறங்கின.
- 1952 - ஐ.நாவின் ஒப்புதலுடன் எரித்திரியா எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது.
- 1959 - நிக்கிட்டா குருசேவ் ஐக்கிய அமெரிக்காவுக்கு பய ணம் மேற்கொண்ட முதல் சோவியத் தலைவர் ஆனார்.
- 1968 - சோவியத்தின் சொண்ட் 5 விண்கலம் ஏவப்பட்டது. சந்திரனைச் சுற்றி வந்து பூமியின் காற்று மண்டலத்தினுள் நுழைந்த முதலாவது விண் கலம் இதுவாகும்.
- 1975 - பிரெஞ்சுத் தீவான கோர்சிக்கா இரண்டு நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.
- 1981 - தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
- 1987 - இந்திய அமைதிப் படைக்கெதிராக திலீபன் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

### பிறப்புகள்

- 1254 - மார்க்கோ போலோ, இத்தாலிய நாடுகாண் பயணி (இ. 1324)
- 1857 - வில்லியம் டாஃப்ட், ஐக்கிய அமெரிக்காவின் 27ஆம் குடியரசுத் தலைவர் (இ. 1930)
- 1860 - மோக்சகுண்டம் விசுவேசுவரய்யா, இந்தியப் பொறியாளர் (இ. 1962)
- 1890 - அகதா கிறிஸ்டி, எழுத்தாளர் (இ. 1976)
- 1909 - சி. என். அண்ணாதுரை, தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் (இ. 1969)

### இறப்புகள்

- 1950 - மறைமலை அடிகள், தனித்தமிழ் இயக்கத் [illegible] (பி. 1876).
- 2005 - [illegible] அரசியல்வாதி (பி. 1946)




**மாயா டீச்சருடன் நம்ம நண்பர்கள் பறித்து வந்த நெல்லிக்காய்களில் யாருக்கு எத்தனை இருக்கு? ஒவ்வொருவருடைய கயிற்றின் வழியே போய்க் கண்டு பிடிங்க பார்க்கலாம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...திருமணத்திற்குப் பிறகு சச்சின் வேறு பகுதிக்குச் செல்லாமல் தான் குடியிருந்த அதே பகுதியில் ஆனால், வேறு வீட்டில் குடியேறினார். சிறுவயது முதற்கொண்ட பழகிய நண்பர்கள், அக்கம் பக்கத்தில் தெரிந்த முகங்கள் ஆகியோருடன் இருப்பதையே சச்சின் விரும்பினார். காரணம் அந்தப் பகுதியில் எங்கு வேண்டுமானாலும் சுற்றலாம் சிறுவர்களுடன் கிரிக்கெட் ஆடலாம். காற்றாடி பறக்க விடலாம். ஆனால், புதிய இடத்திற்கு போனால் அங்குள்ளவர்கள் சச்சினை ஒரு செலிபிரிடியாகவே பார்ப்பார்கள். அதில் செயற்கைத்தனம் இருக்கும். சச்சினின் ஒவ்வொரு அங்க அசைவும் உன்னிப்பாக கவனிக்கப்படும். ஆத்மார்த்தமாக இல்லாமல் அனைத்துமே போலியாக இருக்கும். ஆக, இவற்றைத் தவிர்ப்பதற்காகவே சச்சின் தான் வசித்த பகுதியையே தேர்வு செய்தார்.

புகழ்பெற்ற மனிதனாக இருப்பது ஒருவிதத்தில் மகிழ்ச்சி தரக்கூடியதுதான் என்றாலும், புகழ் ஒளி தனி மனித சுதந்திரத்தைப் பறிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது சச்சினுக்கும் பொருந்தும். சச்சின் நடந்தாலும், ஓடினாலும், சிரித்தாலும் எல்லாம் செய்தியாகிவிடுகின்றன. தன்னைச் சுற்றி எப்போதும் காமிராக்கள், செய்தியாளர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கொஞ்ச நேரம் தனிமை கிடைக்குமா என்று சச்சினின் மனம் ஏங்கியது!




சச்சின் தம்பதிகளுக்கு 1997 ஆம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு சாரா என்று பெயரிட்டார்கள். இரண்டு ஆண்டுகள் கழித்து மகன் அர்ஜுன் பிறந்தான். குழந்தை பிறப்பது சாதாரண விடயம்தான். ஆனால், சச்சினுக்குப் பிறந்தால் அது செய்தி அல்லவா. ஆம், குழந்தைகள் பிறந்த செய்தி மருத்துவ மனையில் கசிந்தவுடன் வழக்க போல் அவர்களைப் புகைப்படம் எடுக்க பத்திரிகையாளர்கள் கூடினர். ஆனால், சச்சின் அவர்களை புகைப்படம் எடுக்க அனுமதிக்கவில்லை. ஒரு சாதாரணத் தகப்பனாகத் தன்னை எண்ணுமாறு வேண்டிக் கொண்டார்.

### குடும்பம் வேறு தொழில் வேறு

புகழ்பெற்ற மனிதனாக இருப்பது ஒரு விதத்தில் மகிழ்ச்சி தரக்கூடியதுதான் என்றாலும் புகழ் ஒளி தனி மனித சுதந்திரத்தைப் பறிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது சச்சினுக்கும் பொருந்தும். சச்சின் நடந்தாலும் ஓடினாலும் சிரித்தாலும் எல்லாம் செய்தியாகிவிடுகின்றன. தன்னைச் சுற்றி எப்போதும் காமிராக்கள், செய்தியாளர்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு கொஞ்ச நேரம் தனிமை கிடைக்குமா என்று சச்சினின் மனம் ஏங்கியது. எனவே, சிறிது இடைவெளி கிடைத்தாலும் அதை வீணடிக்காது உடனே தனது மனைவி, மகன், மகளுடன் கண்காணாத இடத்திற்குச் சென்றுவிடுவார். கிரிக்கெட் விளையாட்டு முன்பைவிட இன்னும் தீவிரமாக நடக்கிறது. வருடம் முழுவதும் ஏதேனும் ஒரு இடத்தில் போட்டிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆக, சச்சினுக்கும் ஆண்டு முழுவதும் போட்டிகளில் கலந்துகொள்ள வாய்ப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. உள்நாட்டில் போட்டிகள் என்றால் சச்சின் அவ்வப்போது வீட்டிற்கு வந்து போவதுண்டு. ஆனால், வெளிநாடு என்றால் சுற்றுப் பயணம் முடிந்து இந்தியா திரும்ப மாதக்கணக்கில் ஆகிவிடும். இது போன்ற சமயங்களில் நல்ல நாள் கிழமை பண்டிகை என்று குடும்பத்துடன் சச்சின் கலந்துகொள்ள முடியாது. ஒரு புகழ்பெற்ற மனிதனின் மனைவியாக இருந்தால் அதனால் ஏற்படும் இழப்புகள் என்ன என்பதை அஞ்சலி அறிந்திருந்தார். எனவே, சச்சின் வீட்டில் இருக்கும் நாள்தான் பண்டிகை. அவருடன் கழிக்கும் கொஞ்ச நேரம்தான் முகூர்த்த நேரம் என்று அஞ்சலி தன்னைப் பக்குபவப்படுத்திக் கொண்டார்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்ற கண்ணதாசன் பாடல் வரிகள் சச்சினுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் அவர் தனது மனைவி அஞ்சலியை வாயாரப் புகழ்கிறார். ஒரு சராசரி மனைவியாக இல்லாமல் தனது குழந்தைகளுக்குத் தாயாக மட்டுமன்றி தந்தையாக இருக்கிறார். வெளிநாடுகளில் இருக்கும்போது எனது குழந்தைகளின் பிறந்தநாள் விழாக்களில் கலந்து கொள்ள முடியாமல் போய் விடும்.

கே. ரமேஷ்


(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

....ஞானமடைந்த குருமார்கள் அவர்களது உடலை ஒரு விமானம் போல உபயோகிக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் பரவச நிலையிலேயே இருக்கிறார்கள். இவர்கள் மாட்டுவண்டி மற்றும் டிராக்டர் ஆகிய நிலைகளின் அனைத்துத் துயரங்களையும் கடந்து மேலெழும்பிப் பறக்கிறார்கள்! அவர்கள் நுண்ணறிவு நிலையில் செயற்படுகிறார்கள்.

நாம் ஆகாய விமானமாக என்ன

7 Chakras Chart




செய்யவேண்டும்? கிராம மக்களுக்கும் இராணுவ அதிகாரிக்கும் இடையே இருந்த வித்தியாசம் என்ன? ஆகாய விமானம் மாறவில்லை. அதிலிருந்து எதையும் எடுக்கவோ சேர்க்கவோ இல்லை. அதில் எந்தவிதமான உருவ மாற்றமும் செய்யவில்லை. சரிதானே? பிறகு என்னதான் வித்தியாசம் சொல்லுங்கள் பார்க்கலாம்....

(ஒரு பெண்மணி பதிலளிக்கிறார்)

அறிவு ஸ்வாமிஜி....?


சரிதான்... அறிவு ஆகாய விமானத்தின் இயந்திர அமைப்பைப் பற்றிய அறிவு கிராமவாசிகளுக்கு அந்தக் கருவி பறக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டிருப்பது தெரியாது. ஆனால் இராணுவ அதிகாரிக்குத் தெரியும். அவ்வளவுதான். அந்த விமானத்தை அவர்கள் புரிந்துகொண்டு கையாண்ட விதம்தான் அதை முதலில் மாட்டு வண்டியாகவும் பிறகு டிராக்டராகவும் இறுதியில் ஆகாய விமானமாகவும் ஆக்கியது.

இதைப்போன்ற நமக்குள்ளும் இயந்திர அமைப்பு அல்லது கியர்கள் உள்ளன. அவை சக்கரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எல்லையற்ற ஆற்றல் மையங்களான இவைகள் சரியாகக் கையாளப்பட்டால் நம்மை விமானமாக ஆக்கிக்கொள்ள முடியும். இந்தச் சக்கரங்களைப் பற்றிய அறிவில்லாதவன் தரையில் நடந்துகொண்டிருக்க இதனை இயக்கத் தெரிந்த குருவோ சுலபமாகப் பறக்கிறார்.

நாம் இந்தச் சக்கரங்களைப் பற்றிய அறிவியலைப் [illegible] னால் தற்சமயம் நாம் [illegible] ஆழ்ந்த விழிப்பற்ற தன்மையில் இருக்கிறோம். என்பதை அறிந்து கொள்ள முடியும். இதைப் புரிந்து கொண்டவுடன் இந்த விழிப்பற்ற சுமையிலிருந்து நம்மை விடுத்துக் கொண்டு நமது இருப்புத் தன்மையின் உயிர் பரிமாணங்களை நோக்கி நகர ஆரம்பிப்போம்.

இந்தச் சக்கரங்கள் நமது உடலில் பருப்பொருளாக இல்லை. தத்துவக் குறியீடுகளான இவை பருவுடலைச் சார்ந்த தல்ல. ஒளியுடலைச் சார்ந்தது.

கிர்லியான் புகைப்படத்தில் இந்தச் சக்கரங்கள் படம் பிடிக்கப்பட்டு தத்துவார்த்தத் தளத்தில் அவற்றின் இருப்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. எப்பொழுது ஒருவன் எதிர்மறை எண்ணங்களில் சிக்கிக்கொண்டிருக்கிறானோ அப்பொழுது அந்த உணர்ச்சிக்கு தொடர்புடைய சக்கரமானது ஒரு மேலங்கியின் பொத்தான் அளவிற்குச் சுருங்கி விடுகிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு சிறியதாகிவிடுகிறது. அதே மனிதன் அதன் தொடர்புடைய நேர்மறை உணர்ச்சிகளை அனுபவிக்கும்பொழுது அந்தச் சக்கரமானது ஒரு வண்டிச் சக்கரத்தின் அளவிற்கு விரிவடைகிறது.



ஆன்மீகம் 18

பரமஹம்ஸ சுவாமி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ பரிசோதனையில் தப்பிக் கொள்வாரா நித்தி?

நங்கள் மற்றவர்களைத் துன்புறுத்தாதபோது, நிச்சயம் உங்களையும் யாரும் துன்புறுத்த முடியாது. நீங்கள் இந்த உலகத்தை துன்புறுத்தாதபோது இந்த உலகம் உங்களை துன்புறுத்தாது. நாம் வாழும் இந்த வாழ்க்கையின் நெறி முறை மற்றவர்களுக்கு ஒளிவீச வேண்டும்.


என் உடலுக்குள் இருக்கும் ஆன்மா உங்கள் ஒவ்வொருவரின் உடலிலும் இருக்கும்... ஆண்மை பரிசோதனையை முடித்துவிட்டு வந்த அடுத்த நாள் பக்தர்களுக்கு நித்தியானந்தா சொன்ன அருளுரை இது.

எப்படியாவது ஆண்மை பரிசோதனைக்கு தடை வாங்கிவிட உச்ச நதிமன்றம் வரை போனார் நித்தியானந்தா. ஆனால, உச்ச நீதிமன்றமோ, இதற்குத் தடைவிதிக்க முடியாது நீங்கள் ஆண்மை பரிசோதனை செய்து கொள்ளுங்கள்! என்று உத்தரவிட்டது.

அதன் பின்னர் கடந்த 8 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா அரசு வைத்தியசாலையில் நித்தியானந்தாவுக்கு ஆண்மை பரிசோதனை நடத்த திட்டமிடப்பட்டது. அன்று காலை சரியாக 7.30 மணிக்கு தனது சீடர்கள் புடைசூழ வைத்தியசாலைக்குள் நுழைந்தார் நித்தியானந்தா. வைத்தியசாலைக்கு வெளியே மீடியா, பொலிஸ், பொது அமைப்புகள் என்று பெருங்கூட்டமே கூடியிருந்தன.

காலை 7.30 மணிக்குத் தொடங்கிய பரிசோதனை முடிய மாலை 5 மணி ஆனது. சரியாக ஒன்பதரை மணி நேரம் வைத்தியசாலையில் இருந்தார் நித்தியானந்தா. வைத்தியசாலை ஊழியர்கள் சிலரிடம் உள்ளே என்ன நடந்தது. முழு உடல் பரிசோதனை நடத்த வேண்டியிருந்த காரணத்தினால் காலை தண்ணீர் கூட குடிக்காமல் வரச் சொல்லியிருந்தோம். அதன் படியே நித்தியானந்தாவும் வந்திருந்தார். அவருக்கு இங்கே பல்வேறு பரிசோதனைகள் நடத்தப் பட்டன. வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி துர்கன்னா தலைமையில் நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் டாக்டர் ராட்கல், தலைமை உளவியல் டாக்டர் சந்திரசேகர், பொது வைத்தியா வீரன்ன கவுடா, மகப்பேறு வைத்தியர் வெங்கட், சிறுநீரக கதிரியக்கவியல் டாக்டர் ராமலிங்கையா, குரல்வள பரிசோதனை நிபுணர் டாக்டர் சுஜதா சித்தபா என 7 டாக்டர்கள் போதும் எதற்காக இந்த பரிசோதனை எடுக்கப்படுகிறது என்று டாக்டர்களிடம் கேடடுத் தெரிந்து கொண்டார் நித்தியானந்தா. அதன் பின்னரே அந்த பரிசோதனை செய்ய அனுமதித்தார். காலையில் முழு உடல் பரிசோதனை முடிந்ததும் அவரை சாப்பிட அனுமதித்தனர். ஆச்சிரமத்தில் இருந்து கொண்டு வந்த பழங் களையும், எங்காவது கமரா இருக்கிறதா என்று என் சீடர்கள் பார்த்து செக் பண்ணிய பின்னர்தான் ஒப்புக் கொள்வேன்!" என்றார் நித்தியானந்தா. அதற்கு டாக்டர்கள் சம்மதம் சொன்னார்கள். நித்தியானந்தா சீடர்கள் அந்த அறையை வந்து பார்த்தாரகள். கமரா இல்லை என்று அவர்கள் சொன்ன பின்னரே நித்தியானந்தா பரிசோத

> “நீங்கள் மற்றவர்களைத் துன்புறுத்தாதபோது, நிச்சயம் உங்களையும் யாரும் துன்புறுத்த முடியாது. நீங்கள் இந்த உலகத்தை துன்புறுத்தாத போது இந்த உலகம் உங்களை துன்புறுத்தாது. நாம் வாழும் இந்த வாழ்க்கையின் நெறிமுறை மற்றவர்களுக்கு ஒளிவீச வேண்டும். என் உடலுக்குள் இருக்கும் ஆன்மா உங்கள் ஒவ்வொருவரின் உடலிலும் இருக்கும்.”



உள்ளடக்கிய குழு நித்தியானந்தாவுக்கு பரிசோதனை செய்தார்கள்.

நித்தியானந்தா காலை வைத்தியசாலைக்குள் வந்ததும் முதலில ஒரு மணி நேரம் தரையில் அமர்ந்து தியானம் செய்தார். உடலை டாக்டர்கள் தொடுவதற்கே அனுமதிக்காமல் அடம்பிடித்தார். மிகவும் பதற்றமாக இருந்தார். 9 மணிக்கு மேல் தான் இயல்பு நிலைக்கு வந்தார். அதன் பின்னரே பரிசோதனை தொடங்கப்பட்டது. ஒவ்வொரு பரிசோதனையின் ஜூஸையும் மட்டும் சாப்பிட்டார். 12 மணிக்கு நரம்பியல் டாக்டர்கள் அவரின் ஆண்மை தன்மையைப் பரிசோதித்து பார்க்க வேண்டும் என்று சொன்ன போது அவரின் முகம் மாறியது.

அந்தப் பரிசோதனைக்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல் நீண்ட நேரம் படுக்கையில் படுத்துக் கொண்டார். பின்னர் தலைமை டாக்டர்கள் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். “சரி பரிசோதனை செய்யலாம். இங்கே னைக்குத் தயாரானார். ஆனால் அத்தனையும் கமராவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த பரிசோதனை முடிந்ததும் ஆச்சிரமத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மதிய உணவை நித்தி சாப்பிட்டார். சற்று நேரம் ஓய்வெடுத்தார். பின்னர், மன ரீதியான வீக்னஸ் தெரிந்து கொள்வதற்கு அவரிடம் 18 கேள்விகள் கேட்கப்பட்டன. ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதில் சொன்னதோடு, கேள்வி கேட்ட வைத்தியரின் மன நிலையை மாற்றும் அளவுக்கு உளவியலாக பெரும் திறன் படைத்தவராக இருந்தார் என்று சொன்னார்கள்.

பரிசோதனைகள் முடிந்து சக்கர நாற்காலியில் உட்கார வைத்து வெளியே அழைத்து வந்தனர். தயாராக நின்றிருந்த அம்புலன்ஸில் நித்தியானந்தா ஏற்றப்பட்டார்.

அம்புலன்ஸ் மடிவாலாவிலுள்ள தடய அறிவியல பரிசோதனை நிலையத்துக்குப் போனது. அங்கே நித்தியானந்தாவுக்கு குரல் பரிசோதனை நடத்தப்பட்டது. அங்கே குரல் பரிசோதனை முடிந்ததும் ஆச்சிரமத்துக்கு புறப்பட்டு விட்டார் நித்தியானந்தா.

மறுநாள் காலை பிடதி ஆச்சிரமததல் பக்தர்களுக்கு அருளாசி கொடுக்கும் நிகழ்ச்சிக்கு சக்கர நாற்காலியில் வாடிய முகத்துடன் வந்தார் நித்தியானந்தா. ஆன்மகம் மட்டுமே என் வாழ்க்கை. என் மீது இங்குள்ள சிலரும் பொலிஸாரும் தொடர்ந்து குறை சொல்லி வருகிறார்கள். மீடியா என்ற பெயரில் இங்கிருக்கும் சிலர் நேற்று நான் வைத்திய பரிசோதனைக்குச் சென்ற போது என் காரை துரத்தியபடி வந்தனர். இது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. இந்த தொந்தரவுகளில் இருந்து நான் விடுபட நினைக்கிறேன். அதனால் என் ஆச்சிரமத்தை திருவண்ணாமலைக்கு மாற்ற முடிவு செய்திருக்கிறேன். பக்தர்களாகிய நீங்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். பிடதி ஆச்சிரமம் வழக்கம்போல செயற்படும். நானும் எப்போது வேண்டுமானாலும் இங்கே வந்து போவேன்! என்று கண் கலங்கியபடி பேசியிருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் நித்தியானந்தாவின் மெடிக்கல் ரிப்போர்ட்டை பொலஸாரிடம் ஒப்படைத்திருக்கிறது வைத்திய சாலை.அதில் என்ன இருக்கிறது என்று விசாரித்தோம். இந்த வயதுடைய ஆண் மகனுக்கு என்ன உணர்வுகள் இருக்குமோ அது நித்தியானந்தாவுக்கு இருக்கிறது. அவரது குரலில் எந்த விதமான மாற்றங்களும் இல்லை. அவர் முழு ஆண்மை உடையவராக இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறதாம். இதனை வைத்து பொலிஸார் தமது அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்குவார்கள்!

ஜூனியர் விகடன்

# இந்தியத் தாதியினது தற்கொலைக்கு ஐந்தரை இலட்சம் அமெரிக்க டொலர்

இங்கிலாந்து தலைநகரம் லண்டனிலுளள மன்னர் 7ஆவது எட்வர்டு வைத்தியசாலையில் இந்தியாவை சேர்ந்த ஜெசிந்தா சால்தான்ஹா (வயது 46) தாதியாக பணியாற்றி வந்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அந்நாட்டின் இளவரசர் வில்லியம்சின் மனைவி கேத்தரின் இந்த வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் செயற்படும் ஒரு வானொலி நிலையம் தொலைபேசியில் ஆள்மாறாட்டம் செய்து ஜெசிந்தாவிடம் பேசி கேத்தரினின் பிரசவம் தொடர்பாக சில தகவல்களை சேகரித்து ஒலிபரப்பியது.

இதற்கிடையில், [illegible] ஜெசிந்தா மர்மமான முறையில் மரணமடைநதார். இதற்கு அவுஸ்திரேலிய வானொலி நிலையத்தின் ஒலிபரபபே காரணமாக அமைந்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

சம்பந்தப்பட்ட வானொலி நிறுவனம் உரிமையை மீறி செயற்பட்டதா? என்பது பற்றி விசாரிக்கப்ப [illegible] அனுமதிரத்து செய்யப்படலாம் என அவுஸ்திரேலிய அரசு அறிவித்திருந்தது.

இந்த விவகாரத்தில் அவுஸ்திரேலிய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை தங்களுக்குள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி விசாரணை நடத்த உத்தரவிட்டது. இதனையடுத்து, தகவல் தொடர்பு கண்காணிப்பு அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித்தனர்.

தாதியின் மர்ம மரணம் தொடர்பாக நடந்துவந்த விசாரணையில் ஜெசிந்தா தற்கொலை செய்து கொண்டு இறந்துப் போனது உறுதிப்படுத்தப்பட்டது.இந்த பரிதாப மரணம் தொடர்பாக அனுதாபம் மட்டுமே தெரிவித்த அந்த வானொலி நிலையம், இந்த மரணத்துக்கு பொறுப்போ, இது தொடர்பான பழியையோ ஏற்றுக்கொள்ள இது வரை முன்வரவில்லை.

இந்நிலையில், தற்கொலை செய்து இறந்துபோன ஜெசிந்தா சால்தான்ஹாவின் குடும்பத்தாருக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குவதாக அந்த வானொலி நிலையம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுக்கு இடமில்லை; போராட்டம் தொடரும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி பாகிஸ்தான் அவாமி தெஹ்ரீக் தலைவர் காத்ரி மற்றும் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி தலைவர் இம்ரான் கான் ஆகியோர் தலைமையில் பாராளுமன்றத்தின் முன்பு தொடர் முற்றுகைப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியும் எந்த சமரசமும் ஏற்படவில்லை.

நவாஸ் பதவி விலக வேண்டும் என்பதில் போராட்டக்குழுவினர் உறுதியாக உள்ளனர்.

இஸ்லாமாபாத் மற்றும் நாடு முழுவதும் எங்கள் தொண்டர்களை அரசு கைது செய்யத் தொடங்கியதால் பேச்சுவார்த்தையை இரத்து செய்திருக்கிறோம்.

ஒரு மாதகாலமாக இங்கே கூடியிருக்கும் மக்களின் சட்டப்பூர்வமான குறைகளைக் கேட்க அரசு விரும்பவில்லை" என்று காத்ரி தெரிவித்திருந்தார்.

இந்தப் போராட்டம் தொடங்கி நேற்று முன்தினத்துடன் ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், அரசுடன் இனி சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்று தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி தலைவர் இம்ரான் கானும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (இ)




## இராணுவத் தாக்குதலில் போகோ ஹராம் தீவிரவாதிகள் 100 பேர் உயிரிழந்துள்ளனர்

(அபுஜா)

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் தனி இஸ்லாமிய நாடு உருவாக்க வலியுறுத்தி தொடர்ந்து அந்நாட்டு இராணுவத்துடன் போரிட்டு வருகிறார்கள். மேலும் அப்பாவி பொதுமக்களை கடத்தி கொன்று குவித்தும் வருகிறார்கள்.

இந்த நிலையில் போகோ ஹராம் தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த கொண்டுகா நகரில் நேற்று முன்தினம் நைஜீரிய இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

போர் விமானம் மற்றும் ஹெலிகொப்டர் மூலம் குண்டுகளை வீசி வான் வழியாகவும், தரைமார்க்கமாகவும் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளிடம் இருந்து பயங்கர ஆயுதங்களும், ரொக்கெட்டில் பயன் படுத்தப்படும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டன.

மேலும் தீவிரவாதிகள் பயன்படுத்திய வாகனங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றினர். (இ)

### ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பாதுகாப்பு நிபுணரான ஹெயின்ஸின் தலையை துண்டித்து

# மீண்டும் வெறிச்செயல்

(பெய்ரூட்)

ஈராக்கில் சதாம் உசேன் ஆதரவு படையான ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் தாக்குதல் நடத்தி அந்நாட்டின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி, சிரியாவில் கைப்பற்றப்பட்ட பகுதியையும் ஒருங்கிணைத்து இஸ்லாமிய நாடு என்ற பெயரில் தனி அரசை நடத்தி வருகின்றது.

இவர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை குர்திஷ் படையினர் மீட்க உதவும் வகையில் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்க போர் விமானங்களின் தாக்குதல்களால் தீவிரவாதிகளின் பிடியில் இருந்த பல்வேறு நகரங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால் ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் அமெரிக்காவை சேர்ந்த பத்திரிகையாளர்களான ஸ்டீவன் ஸ்காட்லாப் மற்றும் ஜேமஸ்போலே ஆகியோரை பிணைக்கதிகளாக பிடித்து அவர்களில் ஸ்காட்லாப்பை தலை துண்டித்து கொன்றனர். தங்கள் மீது தாக்குதல் தொடர்ந்தால் போலேயும் தலை துண்டித்து கொல்லப்படுவார் என்று தீவிரவாதிகள் மிரட்டியிருந்தனர்.

சில, நாட்களில் போலேயும் தலை துண்டித்து கொல்லப்பட்டார். அப்போது தங்களிடம் பிணைக் கைதியாக உள்ள பிரிட்டன் நாட்டை சேர்ந்த டேவிட் ஹெய்ன்ஸ் அடுத்து தலை துண்டிக்கப்படுவார் என தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று ஹெயின்ஸ் தலை துண்டித்து கொல்லப்பட்ட காட்சி வீடியோவில் ஒளிபரப்பாகியுள்ளது.

இதன் மூலம் தங்கள் கோர, முகத்தை தீவிரவாதிகள் மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டியுள்ளனர்.


ஹெயின்சின் தலையை துண்டிக்கும் தீவிரவாதி அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்தால் இது தான் நடக்கும் என்று எச்சரித்துள்ளான்.

சில தினங்களுக்கு முன் தான் ஹெயின்சை விடுவிக்கவேண்டும் என்று அவரது குடும்பத்தினர் தீவிரவாதிகளிடம் வேண்டுகோள் வைத்தனர். இந்நிலையில் தான் அவர் கொல்லப்பட்டுள்ளார். பாதுகாப்பு நிபுணரான ஹெயின்ஸ் கடந்த 2013 ஆம் ஆண்டு சிரியாவில் வேலை செய்தபோது காணாமற் போனார். அவருக்கு 17 வயதில் ஒரு மகளும் 4 வயதில் ஒரு மகளும் உள்ளனர்.

இதேவேளை தீவிரவாதிகளின் அடுத்த குறி அவர்கள் பிடியில் உள்ள பிரிட்டனின் ஆலன் ஹென்னிங் என்று கூறப்படுகிறது. (இ)



## உயரமான நாய் உலகை பிரிந்தது



உலகின் உயரமான நாய் என்ற பட்டத்தை வென்ற "கிரேட்டேன்" வகை நாய் தனது ஐந்தாவது வயதில் இறந்துள்ளது. 75 கிலோ எடையுள்ள இந்த நாய், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை 13.6 கிலோ எடையுள்ள உணவை உட்கொண்டது.

கெவின் டூர்லாக் என்பவருக்குச் சொந்தமான அந்த நாயின் பெயர் சியுஸ் என்பதாகும். 44 அங்குல உயரம் கொண்ட இந்நாய் அதன் பின்னங்கால்களை கொண்டு நின்றால் அதன் உயரம் 7 அடி 4 அங்குல உயரம் இருக்கும். அதிக உயரம் கொண்ட உயிருடன் வாழும் நாய் என்ற முறையில் கடந்த 2012 ஆம் ஆண்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இந்நாய் இடம்பெற்று சாதனை படைத்தது.

இன்னும் இரண்டு மாதங்களில் தனது ஆறாவது பிறந்த நாளை நெருங்கவிருந்த நிலையில், கடந்த வாரம் அந்த நாய் மரணம் அடைந்தது. கலாமசூ பகுதியில் இந்த நாய்க்கு நல்ல வரவேற்பு இருந்தது.(இ)

# பாக். பருவமழை வெள்ளத்தால் 300 பேர் இதுவரை உயிரிழப்பு

## 556 கிராமங்கள் நீரில்; 11 இலட்சம் மக்கள் பாதிப்பு

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் கடந்த 10 நாட்களாக பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் அங்குள்ள செனாப், ஜீலம் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சியால் கோட், குஜ்ரன்வாலா மாவட்டங்களில் மட்டும் 556 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. மேலும் இந்த 2 மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன.

கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் ஆயிரக் கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தத்தளித்து வருகின்றனர்.

பாகிஸ்தானின் வடக்கு பஞ்சாப் மாகாணத்தில் பேரழிவை ஏற்படுத்திய வெள்ளத்தால் வரலாற்று சிறப்பு மிக்க நகரமான முல்தான் நகர் மற்றும் அங்குள்ள பிரபல வழிபாட்டு தலங்களை மூழ்கடிக்கும் அபாயம் ஏற்பட்டது.



வரலாற்று சிறப்பு மிக்க முல்தான் நகரைப் பாதுகாக்க அதிகாரிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வந்த நிலையில், செனாப் நதியில் வெள்ளம் அபாய அளவைத் தாண்டி ஓடியதால் நகருக்குள் வெள்ளம் வராமல் தடுப்பதற்காக நடவடிக்கை எடுத்த இராணுவத்தினர், தடுப்பணையை வெடிவைத்து தகர்த்து வெள்ளத்தை திசை திருப்பி விட்டனர்.

இந்த நடவடிக்கையால் முல்தான் நகரம் தப்பியபோதிலும், தெற்கு பஞ்சாப்பை மற்றும் சிந்து மாகாணத்தின் தென்பகுதியை நோக்கி சீறிப்பாயும் வெள்ளம், அப்பகுதிகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தானில் மழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் இதுவரை 300 பேர் பலியாகியுள்ளதாக தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழை சார்ந்த விபத்து களில் நாடு முழுவதும் சுமார் 500 பேர் காயமடைந்துள்ளனர். பல ஆயிரம் வீடுகள் பெரும்பகுதியாகவும், ஓரளவுக்கும் சேதமடைந்து, சிதிலமாகிக் காணப்படுகின்றன.

வெள்ளம் சூழ்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் பல இலட்சக்கணக்கான ஏக்கர்களில் விளைவிக்கப்பட்டிருந்த உணவுப் பயிர்கள் அழுகி நாசமாகிப் போகின.

பஞ்சாப் மாகாணத்தில் மட்டும் சுமார் 11 இலட்சம் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிந்து மற்றும் இதர மாகாணங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை இதைவிட பன்மடங்கு அதிகமாக இருக்கும், என மதிப்பிடப்பட்டுள்ளது.

முல்தான், முசாபர்கர், ஜங் உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களை பத்திரமாக மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகளும், இராணுவத்தினரும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு அமெரிக்க கூலிப்படை!

இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளால் முன்வைக்கப்படும் இஸ்லாமிய சர்வதேசியம், முஸ்லிம் மக்களையே பிளவுபடுத்துவதுடன் அவர்களை மத்திய கால அடிமைத்தனத்திற் குள்ளேயும் தள்ளி விடும்.

துருக்கியில் அன்றைய ஒட்டோமான் பேரர சின் இஸ்லாமியப் மதரீதியான கிலாஃபத் அரசா ட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு,



இப்போது மீண்டும் அத்தகைய கிலாஃபத் அரசாட்சி நிறுவப்பட்டு ள்ளதாக "ஐ.எஸ்." எனும் சன்னி மார்க்க இஸ்லா மிய பயங்கரவாத இயக்கத்தினர் அண்மையில் அறிவிதுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியா வில் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை இணைத்துத் தனிநாடாக அறிவித்து, இதனை இஸ்லாமிய அரசு என்று பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஐ.எஸ். இயக்கத்தின் தலைவரான அபுபக்கர் அல் பாக்தாதி இப்புதிய அரசின் தலைவ்ராக தன்னையே நியமித்துக் கொண்டு, இப்புதிய கிலாஃபத் அரசானது வடசிரியாவின் அலெப்போ நகரிலிருந்து ஈராக்கின் தியாலா மாகாணம் வரை பரவியிருக்கும் என்றும், உலகெங்குமுள்ள சன்னி மார்க்க முஸ்லிம்கள் இந்தப் புனித ஆட்சிக்கு ஆதரவளிக்குமாறும், இப்புனித நாட்டில் வந்து குடியேறுமாறும் அறை கூவல் விடுத்துள்ளார்.

மேற்காசியாவில், குறிப்பாக ஈராக்கில் அதிருப்தியிலும் விரக்தியிலுமுள்ள சன்னி முஸ்லிம் மக்களை இந்த இயக்கத்தினர் தமக்கு ஆதரவாகக் கவர்ந்திழுப்பதில் கணிசமான வெற்றியைச் சாதித்துள்ளனர்.

இஸ்ரேலின் இனவெறி பயங்கரவாதத் தாக்குதலாலும், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்கத் தாக்குதலாலும், ஈராக்கிலும் ஆப்கானிலும் நடந்துள்ள அமெரிக்க ஆக்கிரமிப்பாலும், இப்பிராந்திய மக்களிடம் நிலவும் ஆத்திரத்தையும் நம்பிக்கையின்மையையும் சாதகமாக்கிக் கொண்டு இந்த இயக்கத்தினர் அண்மைக்காலமாக பிரபலமடைந்து வருகின்றனர்.

ஈராக்கின் அமெரிக்க பொம்மை அரசப் படைகளுக்கு எதிராகவும், சிரிய அரசப் படைகளுக்கு எதிராகவும் நடத்திவரும் தாக்குதல்களையும், பிற சிறுபான்மை மத, இனக்குழுவினர் மீதான படுகொலைகளையும், அமெரிக்கப் பத்திரிகையாளரைப் பகிரங்கமாகக் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளதையும் வீடியோ படம் எடுத்து இணையத்திலும் சமூக வலைத்தளங்களிலும் இவ்வியக்கத்தினர் பரப்பி வருகின்றனர்.

இவற்றின் மூலம், தங்களை உண்மையான இஸ்லாமிய விடுதலை இயக்கமாகச் சித்தரித்துக் கொண்டு தங்களை யாராலும் வெல்ல முடியாது என்ற பிரசாரத்துடன் இணையத்தின் மூலமாக சன்னி முஸ்லிம்களை இவ்வியக்கத்தினர் ஈர்க்கின்றனர்.

இவற்றைக் கண்டு சில சன்னி முஸ்லிம்



கள், இது நம்ம ஆளு என்று இந்த இயக்கத்தினரை ஆதரிப்பதோடு, ஏதோ ஒரு வகையில் இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையிலான அரசாட்சி உலகில் உதயமாகியிருப்பதைப் புதிய நம்பிக்கையாகவும் பார்க்கின்றனர்.

இஸ்லாம்தான் ஒரே தீர்வு என்று இந்தியாவிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சில சன்னி முஸ்லிம் இளைஞர்கள் இந்த ஐ.எஸ்.படையில் இணைந்துள்ளதோடு, தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டத்தில் 26 இளைஞர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற முத்திரை பதித்த டி-சர்டுகள் அணிந்து புகைப்படம் எடுத்து அதனை ஃபேஸ்புக்கில் வெளியிட்டுத் தமது ஆதரவைக் காட்டியுள்ளனர்.

"எங்களை மிகவும் கண்ணியமாக நடத்தினர். எங்கள் மீது ஐ.எஸ். இயக்கத்தினரின் விரல்கள்கூடப் படவில்லை" என்று ஈராக்கிலிருந்து மீண்டு வந்த இந்தியச் செவிலியர்கள் அளித்த பேட்டியைக் குறிப்பிட்டு, இஸ்லாத்தின் நெறிப்படி நடப்பவர்கள் தான் பெண்களைக் கண்ணியமாக நடத்துவார்கள் என்றும், ஐ.எஸ். இயக்கத்தினர் இஸ்லாமிய மார்க்க நெறிப்படி நடக்கும் புனிதப் போராளிகள் என்றும் சில சன்னி மார்க்க முஸ்லிம்கள் இந்த இயக்கத்தினரை ஆதரிக்கின்றனர்.

இஸ்லாமிய நெறிப்படி நடப்பதாக ஐ.எஸ். இயக்கத்தினர் விளம்பரப்படுத்திக் கொண்ட போதிலும், இந்த இயக்கம் மேற்காசிய முஸ்லிம் மக்களின் விடுதலைக்கான, முன்னேற்றத்துக்கான இயக்கமே அல்ல.

கடந்த இருபது ஆண்டுகளாக முஜாஹிதீன்கள், தாலிபான்கள், அல்கய்தாக்கள் எனப் பல்வேறு இஸ்லாமிய இயக்கங்கள் உருவாகியுள்ள போதிலும், தாங்கள்தான் உண்மையான இஸ்லாமிய நெறிப்படி நடப்பவர்கள் என்றுஅவைகூறிக்கொண்ட



போதிலும், ஆப்கானில் தலிபான்கள் ஆட்சி செய்த போதிலும் இத்தகைய இயக்கங்களால் ஏகாதிபத்தியத்தையோ, காலனியாதிககத்தையோ வீழ்த்த முடியவில்லை.

இக் குறுங்குழுவாத சன்னி மார்க்கப் பயங்கரவாத இயக்கங்கள் அமெரிக்காவை எதிர்ப்பதைப்போலக் காட்டிக் கொண்டாலும், பல நாடுகளில் அமெரிக்காவின் கூலிப்படையாகவே இயங்கியுள்ளன.

1970-களில் எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய நாடுகள் அரபு தேசியவாத முழக்கத்துடன் பெயரளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பைக் காட்டின.

ஆனால் இஸ்லாமிய சர்வதேசியம் பற்றிப் பேசும் இத்தகைய இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களோ, ஏகாதிபத்தியங்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் கூட்டுச் சேர்ந்து தமது நிலையை வலுப்படுத்திக் கொண்டு, கூட்டுக் கொள்ளையில் ஈடுபடுவதோடு, பெயரளவுக்குக் கூட ஜனநாயகமே இல்லாமல் அப்பட்டமான கொடுங்கோன்மையைத்தான் நிலைநாட்டின.

ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்ட தேசியத்தைக் கட்டியமைப்பதற்கான நோக்கமோ, அதற்கான அரசியல்-பொருளாதாரத் திட்டமோ, நடைமுறையோ இந்த இயக்கங்களிடமில்லை என்பதோடு, துருக்கியின் கமால்பாட்சாவும், எகிப்தின் நாசரும், ஈராக்கின் சதாமும் மேற்கொண்ட பெயரளவிலான சமூக சீர்திருத்தங்களைக்கூட இத்தகைய இயக்கங்கள் தீமறுத்துப் போட்டன.

இவற்றின் விளைவாக, நாகரிகத்தால் முன்னேறிய மேற்காசிய சமூகம், பல நூற்றாண்டுகள் பின்னுக்கு இழுக்கப்பட்டு இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்ட அவலம் தான் நடந்துள்ளது.

சதாம் உசேனின் சர்வாதிகார ஆட்சியில் கூட, ஷியா, சன்னி எனும் இஸ்லாமிய மதப்பிரிவினருக்கிடையே மோதல்கள் இருந்ததில்லை. அவரது ஆட்சியில் பெண்கள் கல்வி கற்க எந்தத் தடையும் இருந்ததில்லை.

ஆனால், பாகிஸ்தானின் ஸ்வாட் பள்ளத்தாக்குப் பகுதியில் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்த காரணத்துக்காக சிறுமி மலாலாவைச் சுட்ட கொடூரத்தைச் செய்த தலிபான்கள், இதனை இஸ்லாத்தின் பெயரால் நியாயப்படுத்தினர்.

அபின் பயிரிட்டு போதை வியாபாரமும், அந்தந்த வட்டாரத்தில் யுத்தப் பிரபுக்கள் ஷாரியத் சட்டப்படி தன்னிச்சையாக நாட்டாமை செலுத்துவதுமாகவே ஆப்கானில் தலிபான்களது ஆட்சி நடந்தது.

தங்களை இஸ்லாத்தின் மார்க்க நெறிப்படி நடப்பவர்களாகக் காட்டிக் கொண்ட தலிபான்களும், அவர்களைவிட இன்னும் தீவிரமாக இஸ்லாத்தை செயறபடுத்துவதாகக் காட்டிக் கொண்டு பயங்கரவாதத் தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிட்ட அல்கய்தாக்களும் சன்னி மார்க்க இஸ்லாமிய ஆயுதக் குழுக்களைக்கூட ஐக்கியப்படுத்த முடியாமல் போனதோடு, தங்களுக்குள் ளேயே பிளவுபட்டு மோதிக் கொண்டார்கள்.

இவற்றுக்குப் பிறகு அல்கய்தாவைவிட இன்னும் மூர்க்கமாக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதாகக் காட்டிக் கொண்டு இப்போது புதிதாக ஐ.எஸ். என்ற சன்னி மார்க்க இயக்கம் முளைத்துள்ளது. இந்த ஐ.எஸ். இயக்கத்தின் பின்னணிதான் என்ன?

ஈராக்கின் அண்டை நாடான சிரியாவில் அதிபர் ஆசாத் தலைமையிலான அரசைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு, ஈராக்கின் வடபகுதியில் இயங்கிவந்த அல் பாக்தாதி என்பவர் தலைமையிலான "ஈராக்கிய அல்கய்தா" என்ற சன்னி மார்க்க ஆயுதக் குழுவை ஆதரித்து வளர்த்த அமெரிக்கா, இவர்களை விடுதலைப் போராளிகளாகச் சித்தரித்து ஜோர்டானில் ராணுவப் பயிற்சி அளித்து தனது கூலிப்படையாகப் பயன் படுத்திக் கொண்டது. இக்குழுவுக்கு சவூதி அரேபியா, கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து தர்ராளமாக நிதியும், அமெரிக்காவிடமிருந்து அதிநவீன ஆயுதங்களும் வாரிவழங்கப் பட்டன.......... -இணையம்- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு - கூட்டமைப்பு இடையே தேர்தலுக்கு முன் பேச்சில்லை

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பு இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள கொழும்பின் முக்கிய ஊடகம் ஒன்று ஐ.நா. கூட்டத்தொடரின் போது இந்திய பிரதமரை சந்தித்து விட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிடிவாதமாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகளின் அடுத்த கூட்டத்தொடரின் போது இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை சந்திப்பதற்கான அனுமதியை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

எனினும் இந்தச் சந்திப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை தொடர்ந்து மோடியை சந்திப்பதற்கு ஏதுவான விதத்தில் இலங்கை ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலை மாற்றியமைப்பதற்கு வெளிவிவகார அமைச்சு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இரு தலைவர்கள் மத்தியிலான சந்திப்பிற்கு சாத்தியம் இருப்பதாக வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் இந்திய பிரதமருடனான சந்திப்பே மோடியை சந்திப்பதற்கான ஆவலை ஜனாதிபதியிடம் ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பிற்கான ஆரம்ப வேலைகளை இந்து நாளிதழிலுக்கு வழங்கிய பேட்டி மூலமாக ஆரம்பித்துள்ளார். ஜனாதிபதியை பேட்டி கண்டவர் சுப்பிரமணிய சுவாமியின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த பேட்டியில், பொலிஸ் அதிகாரம் தவிர ஏனையவை குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடன் பேசுவதற்கு தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில், பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாகவே பேச்சுவார்த்தைகள் இடம்பெறவேண்டும் என ஜனாதிபதி வற்புறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து அவர் விலகிவிட்டாரா என்பது தெளிவாக தெரியவில்லை.

இதேவேளை ஜனாதிபதி மஹிந்த பிரதமர் மோடியை சந்தித்தாலும் கூட அந்த சந்திப்பு அவருக்கு தர்ம சங்கடமானதாக அமையலாம், தனது பதவியேற்பு நிகழ்வின் பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போது தான் சுட்டிக்காட்டிய விடயங்களில் முன்னேற்றம் ஏற்படாததை மோடி சுட்டிக்காட்டலாம்.

மேலும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக அரசு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன எனவும் அந்த ஊடகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ)



பதுளை கல்வி வலயத்திலுள்ள ஊவா- ஹைலன்ஸ் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப விஞ்ஞான கூடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்த பின்னர் அப்பாடசாலை மாணவர்களுடன் அளவலாவுவதை படத்தில் காணலாம்.

## இழுவைப் படகை கைவிட முடியாது

இழுவை படகை பயன்படுத்தி மீன்பிடிக்கும் முறைமையினை உடனடியாக இடைநிறுத்த முடியாது என தமிழக மீனவர்கள் அறிவித்துள்ளனர். இலங்கை - இந்திய கடற்பரப்பில் தமிழ் நாட்டு மீனவர்கள் இழுவை படகு முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் இதனால் கடல்வளம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதனை உடனடியாக இடைநிறுத்த முடியாது என்று, இலங்கையில் கைதாகும் மீனவர் களை விடுவிக்கும் இயக்கத்தின் தலைவர் யு.அருளானந்தம் தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் 72 படகுகளையும், 78 மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அவர் இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரியுள்ளார். (இ)

# சிந்தனையில் கோரிய மஹிந்த நடைமுறையில் மறுப்பது ஏன்?

## சோபித தேரர்


முழு நாடுமே எதிர்க்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதில் என்ன பிரச்சினை காணப்படுகின்றது. மஹிந்த சிந்தனையிலும் நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்யுமாறு கோரப்பட்டுள்ளது என நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

கோட்டே ஸ்ரீ நாக விஹாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எல்லா தேர்தல்களின் போதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்வதாக வாக்குறுதி அளிக்கப்படுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினால் முழு நாடுமே அநீதிக்கு உள்ளாகியுள்ளது.

நாட்டின் உன்னதமான சட்டமாக அரசியல் அமைப்பு கருதப்படுகின்றது.



1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பிற்கு அமைய நிறைவேற்று அதிகாரத்திற்கு அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அவசியம் நிறைவேற்று அதிகாரத்திற்கு [illegible]

அன்று முதல் இன்றுவரையில் நிறைவேற்று அதிகாரத்திற்கு சர்வ மத தலைவர்கள், இடதுசாரி கட்சிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இலகுவில் இல்லாதொழிக்க முடியும்.

பொலிஸ் திணைக்களம், நீதி மன்றம் உள்ளிட்ட அனைத்துமே அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய விரும்பும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இன, மத, பேதங்களைக் களைந்து அனைவரும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துசெய்யும் முயற்சியில் இணைந்து கொள்ள வேண்டுமென மாதுலுவாவே சோபித தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### ஆசைக்கோர் அளவில்லை!

ஒரு ஊரிலே கடவுள் பக்தர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வந்தார்.

ஒருநாள் அவர் கோவிலுக்குச் சென்று கடவுளிடம் "எனக்கு ஒரு இலட்சம் ரூபாய் நீ கொடுத்தால் நான் உன் சந்நிதியில் ஒரு தேங்காய் உடைக்கிறேன்" என்று வேண்டினார்.

கடவுள் உடனே அவர் கண் முன்னாடி தோன்றி " நீ கேட்ட ஒரு இலட்சம் ரூபாய்"என்று அவன் கையிலே பணத்தைக் கொடுத்து விட்டு மறைத்தார்.

இவனால் நம்ப முடியவில்லை. இவ்வளவு சுலபமாகக் கிடைக்கும் என்று தெரிந்திருந்தால் அநாவசியமாக ஒரு தேங்காய் உடைக்கிறேன் என்று வேண்டியிருக்கமாட்டேன். இருந்தாலும் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டியது கடமையாகும் என்று நினைத்தார்.

உடனே பக்கத்தில் உள்ள கடையொன்றிற்குச் சென்றான். ஒரு தேங்காயைக் கையில் எடுத்தான். "இது என்ன விலை" என்று முதலாளியிடம் கேட்டான்.

"ஐந்து ரூபாய்" என்றார் கடையில் இருந்தவர்.

"விலை அதிகமாக இருக்கிறதே" என்றான். "அப்படியென் றால் ஒன்று செய்யுங்கள்... அடுத்த ஊருக்குப்போய் அங்கே யுள்ள தென்னந்தோப்பில் இதைவிட குறைந்த விலைக்கு தேங்காய் வாங்கலாம்" என்றான்.

"சரி" என்று கூறிவிட்டு அடுத்த ஊருக்குக் புறப்பட்டான்.

அங்கே போய் விசாரித்தான்."ஒரு தேங்காய் மூன்று ரூபாய் விலை" என்றார்கள். "இதுவும் அதிகமாகத் தெரிகிறது" என்றார்.

"அப்படியென்றால் அதோ பார்... அந்த ஆற்றோரமாக ஒரு தென்னை மரம் இருக்கிறது. அதிலே நீயே ஏறி பறித்துக்கொள். ஒரு தேங்காய் ஒரு ரூபாய்" என்று தோப்பிற்குச் சொந்தக்காரன் கூறினான்.

இவனுக்கு மரம் ஏறத்தெரியாது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? விலையும் அதிகமாக இருந்தது. ஆற்றோரமாகச் சென்றார். தட்டுத்தடுமாறி அந்த மரத்தில் ஏறினார். அந்தத் தென்னை மரம் வளைந்து ஆற்றுப் பக்கமாகப் போய் மறுபடியும் நிமிர்ந்தது. அதாவது மரத்தின் உச்சி சரியாக ஆற்றுக்கு நடு வில் இருந்தது.

இவர் கடவுள் கொடுத்த ஒரு இலட்சம் ரூபாவை மடியிலே இறுக்கிக் கட்டினார். உச்சிக்குப் போய் தேங்காய் பறிக்கிற சமயத்தில் காற்றும் மழையும் பலமாக கலந்து அடிக்க ஆரம்பி த்தது.

இவனது கால் வழுக்கி விட்டது. சட்டென்று ஒரு மட்டையைப் பிடித்துக்கொண்டு தொங்கினான். கீழே பயங்கர வெள்ளம். மடியில் ஒரு இலட்சம் ரூபாய் பணம். இவனது மனம் பதற ஆரம்பித்தது. இந்தச் சமயம் கரையிலே ஒரு யானைப் பாகன் யானையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"ஐயா"ஒரு உதவி என்று கத்தினான். அவன் "என்ன வேண்டுமென்று" கேட்டான். "உன் யானையை மெதுவாக அழைத்து வந்து எனக்கு நேராக நிறுத்தி என் காலைப்பிடித்து கீழே இறக்கி விடு என் மடியில் இருக்கும் 10 ஆயிரம் ரூபாவைத் தருகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான் இந்தக்காலத்தில் கால், கை என்பவற்றை பிடித்துவிட்டால் கூட 10 ஆயிரம் ரூபாவை எவருமே தரமா ட்டார்கள். இவன் காலைப் பிடித்தால் 10 ஆயிரம் ரூபா தருகி றேன் என்று கூறுகிறான்.

சிறிது நேரம் யோசித்தான். உடனே யானையை அவன் அருகில் கொண்டு சென்று நிறுத்தினான். அவன் காலைப் பிடித்தான். அவ்வளவுதான் அவ்வேளையில் யானை மெது வாக நடந்து அப்பாலே சென்று விட்டது. இப்போது யானைப் பாகன் இவன் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொங் கினான்.

இப்போது யானைப் பாகன் சொன்னான், தம்பி!...மட்டையை விடாதே!... கெட்டியாகப் பிடித்துக்கொள்! நான் உனக்கு 10 ஆயிரம் ரூபா பணம் தருகிறேன்... இதோ மடியில்தான் வைத் திருக்கிறேன் என்றான்.

மேலே தொங்கிறவனுக்கு இந்த நிலைமையிலும் ஒரு பெரிய சந்தோசம். மேற்கொண்டு ஒரு 10 ஆயிரம் ரூபா பணம் தனக்கு கிடைக்கும் போல் இருக்கிறதே என்று நினைத்து தனது மனதை தேற்றிக் கொண்டான். இந்த சமயத்தில் ஒருவன் ஒட்டகத்தை குளிப்பாட்டிக் கொண்டு இருப்பதை இந்த யானைப்பாகன் கண்டு விட்டான். ஐயா ஒட்டகக் காரரே அதை இங்கே கொண்டு வாருங்கள். எங்கள் காலை பிடித்து இறக்கி விடுங்கள் . நாங்கள் பணம் தருகின்றோம். அவனும் பணத்திற்கு ஆசைப்பட்டு வந்து அவனது காலைப் பிடித்த சமயம் ஒட்டகமும் நழுவிப்போய் விட்டது. இப்போது மூன்று பேரும் வரிசையாகத் தொங்கிக் கொண்டிருந்தார் கள். தம்பி மட்டையை விட்டுவிடாதே. கெட்டியாகப் பிடித்துக் கொள். நான் என் மடியிலே இருக்கிற 5 ஆயிரம் ரூபாவை உனக்குத் தருகி றேன் என்றான். மேலே தொங்குகிறவனுக்கு இன்னும் சந்தோசம். இவனும் பணம் தருகிறேன் என்று கூறுகிறான். அப்படியென்றால் இன்றைக்கு நமக்கு மொத்த வரவு எவ்வளவு என்று ஒவ்வொன்றாகக் கூட்டிப் பார்த்தான். மனக்கணக்கு சரியாக வரவில்லை. உடனே விரலைவிட்டு எண்ண ஆரம்பித்தான். அவ்வளவுதான். மட்டையை விட்டு கை நழுவி வந்துவிட்டது.

மூன்று பேரும் பொத்தென ஆற்றிலே விழுந்தார்கள்.

படாதபாடுபட்டு தட்டுத் தடுமாறி கரைக்கு வந்து சேர்ந்தார்கள். மூன்று பேரின் மடியில் வைத்திருந்த பணமும் ஆற்றோடு அள்ளுண்டு சென்றுவிட்டது.

"பேராசை பெரும் நட்டம்" அப்படியென்று ஒரு பழமொழி உள்ளது. அதை விளக்குவதற்காகத்தான் இக்கதை கூறப்பட்டது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிகள் தொடர்பான நூல்களை கிளி.மத்திய நிலையத்தில் பெறலாம்

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் வெளியிடப்பட்ட அனைத்து புத்தகங்களையும் கிளிநொச்சியில் அமைந்துள்ள மத்திய புத்தக நிலையத்தில் பெற முடியுமென அமைச்சின் மாவட்ட அதிகாரி நடராசா உமாநாத் தெரிவித்துள்ளார்.

பேச்சு தமிழ், எழுத்து தமிழ், பேச்சு சிங்களம், சிங்களத்தில் தமிழ், இலகு தமிழ், இலகு சிங்களம், இல்கு தமிழ் பயிற்சி நூல் , தமிழ் மொழி கற்போம், நாம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் கற்போம் ஆகிய நூல்கள் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள வடமாகாண மத்திய புத்தக நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற 021 228 3660 அல்லது 075 0539 415 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென அவர் அறிவித்துள்ளார். (2-254)

# கலாசார விழிப்புணர்வுக்கான ஊர்வலமும் வீதி நாடகமும்

(குருமன்காடு)

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், கலாசாரத்தை பேணும் வகையிலுமான விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் வீதி நாடகம் நேற்று முன்தினம் வவுனியா பேருந்து நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.



**எங்கள் தோள்களில்** என்னும தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த வீதி ஊர்வலம் மற்றும் வீதி நாடகத்தினை வட மாகாண கல்விபண பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகம் ஒழுங்கமைப்பு செய்திருந்தது.

இளம் தலைமுறையினர் மத்தியில் கலாசார சீரழிவுகளை நீக்கும் முகமாக ஏற்பாடு செய்திருந்த இவ் விழிப்புணர்வு நாடகத்தினை திருமறைக்கலா மன்றத்தின் இளைஞர் குழுவினர் வழங்கியிருந்தனர்.

இதன்போது தற்போதைய காலச் சூழலில் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நாகரிக மோகத்தினால் ஏற்படும் கலாசார சீரழிவுகள், தற்கொலைகளுக்கான காரணிகள் போன்ற விடயங்களை ஊர்வலமும் மற்றும் வீதி நாடகமும் எடுத்தியம்பின. (2-250)




## முதலிடம் பெற்ற பிரதேச செயலகங்கள் தேசிய மட்ட போட்டியில்

(கிளிநொச்சி)

முதியோர் தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரதேச செயலகங்களிலும் இத்தினத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முதியோர் சங்கங்களுக்கான பொது அறிவுப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் யாழ். மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலகமும் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகமும் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள தேசிய முதியோர் செயலகத்தில் வெற்றி பெற்ற மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட பொது அறிவுப்போட்டி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் முடக்க நிலையில்

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பனங்காமம் ப.நோ. கூட்டுறவு சங்கமானது வடமாகாணத்திலேயே இடப்பெயர்விற்கு முன் சிறந்து விளங்கியதும் வன்னி யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெயர்ந்து பல இடங்களுக்கு சென்று கொண்டிருந்த நிலையில் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவளித்து வந்ததுமான இச் சங்கம் இன்று சமாதான சூழ்நிலையில் முன்னேற்றம் எதுவுமின்றி செயலிழந்துள்ளதாக இப் பிரதேச மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

இப் ப.நோ.கூட்டுறவு சங்கமானது சுமார் அறுபது வருடங்களுக்கு மேற்பட்ட ஒன்றாகும்.

இச் சங்கம் 13 கிளைகளையும் 45 இற்கும் மேற்பட்ட பணியாளர்களையும் எரிபொருள் நிரப்பு நிலையம், எண்ணெய் ஆலை மற்றும் அரைக்கும் ஆலை உட்பட பலகோடி ரூபா பெறுமதியான அசையும் மற்றும் அசையா சொத்துக்களுடன் வன்னி இறுதி யுத்தத்திற்கு முன்னரான காலப் பகுதியில் இயங்கி வந்தது.

இறுதியாக வட்டுவாகல் வரை சென்று உணவுப் பொருட்களை மக்களுக்கு வழங்கியதுடன் மக்களின் பசியைப் போக்க பாற்கஞ்சியும் வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பலம் வாய்ந்ததாக இயங்கிய இச்சங்கமானது மக்கள் மீள்குடியேற்றத்தின் போது பல்வேறு இழப்புக்களுடன் சொந்த இடத்தில் 13 விற்பனை கிளைகளுடனும் 40 பணியாளர்களுடனும் தனது பணியை ஆரம்பித்து சிறப்பாக இயங்கிய நிலையில் தற்போது வருமானத்திற்கு எதுவுமின்றி 10 இற்குட்பட்ட பணியாளர்களுடனும் ஒரு சில விற்பனை கிளைகளுடனும் இயங்குகின்றது.

பணியாளர்களுக்கு பல மாதங்களுக்கு மேலாக வேதனம் வழங்க முடியாமையால் அவர்களும் வேலையிலிருந்து விலகியுள்ளனர்.

எனவே ஆளுமையுடன் இயங்கிய இதன் செயற்பாடுகள் தற்போது முடங்கியுள்ளமை மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இச் சங்கம் தொடர்பாக வட மாகாண சபை கூட்டுறவு சங்கங்களுக்கு பொறுப்பான அமைச்சரும் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட துறை சார்ந்த அதிகாரிகளும் இவ் விடயத்தை கவனத்தில் எடுத்து மீளவும் அது இயங்குவதற்கு வழி ஏற்படுத்தித் தர வேண்டுமென மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கைவிடுக்கின்றனர். (2-15)





**மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 93 ஆவது நினைவு தினம் கடந்த 11 ஆம் திகதி வவுனியா குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள நினைவு முற்றத்தில் நடைபெற்ற போது...**

**(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)**

# அனுமதியளிக்கப்படும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் காலதாமதம் ஏற்படுகின்றது

## பிரதேச சபை மீது மக்கள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச சபையினுடைய செயற்பாடுகள் மந்த கதியில் இருப்பதன் காரணமாக பிரதேச சபையினூடாக பொது மக்களுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படாதுள்ளதாக இப் பிரதேச மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் குற்றம் சாட்டுகின்றனர்.

துணுக்காய் பிரதேச சபையானது 20 கிராம சேவையாளர்கள் பிரிவைக் கொண்டதும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களைக் கொண்ட பரந்துபட்ட பிரதேசத்திற்குரிய ஒரு சபையாகும்.

இச் சபையினால் முன்னெடுக்கப்பட்ட மங்கை நகர் (1 1/4 கிலோ மீற்றர்) பிரதான வீதியானது பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டிருந்த போதும் குறுகிய காலத்தினுள்ளேயே குறித்த வீதியானது பாரிய குழிகள் உருவாகி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது.

இதேபோல் யோகபுரம் மத்தியிலிருந்து திருநகர் செல்கின்ற பிரதான வீதியின் 1 1/4 கிலோ மீற்றர் தூரப் பகுதியும் செப்பனிடப்பட்ட குறுகிய காலத்திற்குள்ளேயே சேதமடைந்து காணப்படுகிறது.

இவை இரண்டும் தார் கலவைகள் போடப்பட்டு அமைக்கப்பட்ட வீதியாகும்.

இதேவேளை யோகபுரம் மத்தி கிராமத்திலிருந்து குஞ்சுக்குளம் கிராமத்திற்கு செல்கின்ற ஒரு கிலோமீற்றர் வீதியானது புனரமைப்பு செய்வது பற்றிய பிரதேச சபையின் அமர்வு ஒன்றுகூடலின் போது கலந்தாலோசிக்கப்பட்டு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டும் இதற்கான வேலைத்திட்டங்கள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் மக்களுக்கான மணல் விநியோகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியினை மக்கள் கூடும் பொது இடங்களில் தெரு மின்விளக்குகள் பொருத்துவதற்காக துணுக்காய் பிரதேச சபையிடம் வழங்கி வருடக் கணக்காகியிருந்த போதும் அம் மின் விளக்குகள் இதுவரை பொருத்தப்படவில்லையென மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் இங்குள்ள கொல்களங்களில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளுக்கு சுகாதார பரிசோதகரின் அனுமதி இறப்பர் முத்திரை குத்தப்படுவதில்லையெனவும் இங்குள்ள பல வர்த்தக நிலையங்களில் நிறுப்பதற்கு பயன்படுத்தும் பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டு முத்திரையிடப்படவில்லை என்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கூறுகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபை தவிசாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவரது அலுவலக தொலைபேசி இலக்கங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன செயலிழந்து காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

## வெடிபொருள் வெடித்ததில் 10 வயது சிறுவன் படுகாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் குப்பைக்குள் இருந்த வெடிபொருள் வெடித்ததில் ராஜ்குமார் டினோசன் என்ற 10 வயது சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். காணியொன்றில் எரிந்து கொண்டிருந்த குப்பையிலிருந்து பாரிய சத்தத்துடன் வெடிபொருளொன்று வெடித்துள்ளது.

இதன்போது அப்பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனின் கழுத்துப் பகுதியில் வெடிபொருளின் பாகங்கள் தாக்கி சிறுவன் படுகாயமடைந்துள்ளான். இது தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைவாய்ப்பை அதிகரிக்க வேண்டியுள்ளது



பன்னசார்ந்த உற்பத்திகள் எதிர்காலத்தை நோக்கியதாகவும் உள்ளூர் வெளியூர் சந்தை வாய்ப்புக்கு ஏற்ற வகையிலும் முன்னெடுக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார்.

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நேற்றைய தினம் இடம்பெற்ற பனம் கைப்பணி பயிற்சியாளர்களின் கைப்பணி கண்காட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பனை அபிவிருத்தி சபையின் நெறிப்படுத்தலுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பனம் சார்ந்த கைப்பணிப் பயிற்சிகள் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்ற இச் செயற்பாடானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் பனை சார்ந்த தொழிற்றுறை யாழ்.மாவட்டம் உள்ளடங்கலான வடபகுதியிலும் மற்றும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின்ஏனைய பகுதிகளிலும் பாரிய முன்னேற்றத்தை காண முடியும்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் பனைசார்ந்த தொழிற்றுறையுடன்ஒப்பிடும்போது தற்போது பனை சார்ந்த தொழிற்றுறை வளர்ச்சி பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ)

# திருவடிநிலை வித்தியாலய நிலைமைகளை கல்வி அமைச்சர் நேரில் பார்வையிட்டார்



யாழ்.சுழிபுரம் திருவடிநிலை சைவத் தமிழ் வித்தியாசாலையில் வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராசா மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அடிப்படை வசதி வாய்ப்புகளற்ற நிலையில் ஆசிரியர் பற்றாக்குறைகளுடன் இயங்கி வரும் யாழ்.சுழிபுரம் திருவடிநிலை சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இன்றைய நிலைமைகளை வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் அமைச்சர் த.குருகுலராசா மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டு அறிந்து கொண்டனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சருடன் வடமாகாண சபை உறுப்பினரும் வடமாகாணகல்விக்குழு உறுப்பினருமானபா.கஜதீபன், வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் நிலைமைகளைப் பார்வையிட்ட குழுவினர் பிரச்சினைகளை அறிந்து கொண்டதுடன் மிக விரைவில் தீர்வினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தனர். இதில் அதிபர், ஆசிரியர், பாடசாலை மாணவர்கள், அப் பகுதிமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)

# போர்க்காலத்தில் இருந்ததைவிட அதிகளவான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்கின்றார்கள்

நாட்டு மக்கள் உணவுக்காக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர், சிலர் பட்டினியோடிருக்கின்றனர். ஆனால் ஆட்சியிலுள்ளவர்களும் அவரது குடும்பத்தினரும் நெருங்கிய சகாக்களும் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர் என குற்றம் சாட்டியுள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.

ஊவாமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஐ.தே.க., ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டங்களை நடத்திவருகிறது. ஐக்கிய தேசியக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணான்டோவை ஆதரித்து ஹப்புத்தளை, பேருவில தோட்டத்தில் நேற்று முன்தினம் பிரசார கூட்டமொன்று நடைபெற்றது.

இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், பெரும்பகுதி மக்கள் உணவுக்காக கஷ்டப்படுகின்றனர். ஒரு காலணியை வாங்குவதற்காக 200 ரூபாவைப் பெறுவதற்கு எவ்வளவோ பாடுபடுகின்றனர். ஆனால் மஹிந்த குடும்பமோ விலை உயர்ந்த உடைகளுடன் ஆடம்பரமாக வாழ்கின்றது. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின் ஒரு நன்மை நிகழ்ந்திருக்கிறது. அது என்னவென்றால் வடக்கும் தெற்கும் இணைந்திருக்கிறது.

மக்கள் வடக்குக்கும் தெற்குக்கும பயணிக்க முடிகிறது. அதனை விட எந்த நன்மையும் கிட்டவில்லை. போர்க்காலத்தில் இருந்ததை விட மக்கள் இப்போதுதான் அதிக நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இலங்கையில் இரண்டு உலகங்கள் இருக்கின்றன என்பதுக்கு இவைதான் எடுத்துக்காட்டு. இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரிதும் பங்களிப்பது மலையக உற்பத்திகளே.

ஆனால் தோட்டத்துறையினருக்கு மஹிந்த அரசு எந்த நன்மைகளையும் செய்யவில்லை. அவர்களுக்கான சம்பளம் மற்றும் முறையான வாழ்க்கை நிலைமைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த நிலைமை கட்டாயம் மாறும். ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அனைத்து இலங்கையர்களுக்கும் சம உரிமை உறுதிப்படுத்தப்படும். ஐ.தே.க. அந்த இலக்கை அடைய ஊவா தேர்தல் முதற்புள்ளி. நாம் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ருவான் விஜயவர்தன, மேல் மாகாண சபை உறுப்பினர் மனோ கணேசன், மேல் மாகாண சபையின் முனாள் உறுப்பினர் சி.வை.பி. ராம் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (இ)

## குளவிக்கொட்டுக்குள்ளான 7 பேர் வைத்தியசாலையில்

பொகவந்தலாவை ரொக்கில் தோட்டத்தில் நேற்று குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் 4 பெண்களும் 3 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (இ)



வாழ்வக நிறுவனத்தினால் நடத்தப்படும் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்த தடகளப்போட்டி அண்மையில் இடம்பெற்ற போது...

# வைத்தியசாலையில் நுளம்புக்கடி தொல்லை சிகிச்சை பெறும் நோயாளர்கள் கடும் அவதி

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நோயாளர்கள் விடுதிகளில் நுளம்புத்தொல்லை அதிகமாக காணப்படுவதாக அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர் பெரும் அவதிக்குள்ளாவதாக தெரிவிக்கப் படுகிறது. இதனால் அங்கு சிகிச்சைபெறும் நோயாளர்கள் இரவு பொழுதை நுளம்புக்கடியின் மத்தியில் கழிப்பதனால் பெரும் அவஸ்தைப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

விடுதிகளில் கட்டில்களுக்கான நுளம்பு வலைகள் தொங்க விடப்பட்டிருந்த போதிலும் ஒரு சில கட்டில்களுக்கு நுளம்பு வலை இல்லாது காணப்படுவதனாலும் மின் விசிறிகள் சில இயங்காமையினாலும் தாம் மாலை வேளைகளிலும் இரவு வேளைகளிலும் நுளம்புக்கடிக்கு உட்படுவதாக கூறுகின்றனர்.

கூடுதலாக குழந்தைகளுக்கான விடுதி இல.03 இல் ஒரு சில கட்டில்களுக்கு நுளம்பு வலை தொங்கவிடப்படாது காணப்படுவதால் அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் குழந்தைகள் தொடக்கம் அவர்களை பராமரிப்பவர்கள் நுளம்புக்கடியினால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் தமக்கு டெங்கு நோய் ஏற்படலாம் என நோயாளர்களால் அச்சம் வெளியிடப்படுகிறது.

அத்துடன் தற்போது நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில்மட்டும்நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென நோயாளர்களால் கேள்வியெழுப்பப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து வைத்தியசாலையில் துப்புரவு பணி மூலமும் சுற்றுச்சூழலுக்கு புகையூட்டுவதன் மூலமும் நுளம்பின் தாக்கத்திலிருந்து நோயாளர்களை பாதுகாக்க முடியும் என பாதிக்கப்பட்ட நோயாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. (2-271)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருச்செல்வம் ஜோசப் மங்களநாதன்



இளவாலையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் ஜோசப் மங்களநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று முன் தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை அன்னம்மாள் கோவிலில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மனோன்மணி கடந்த 12 ஆம்திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு St. John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Road, Toronto, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வடிவேலு கடந்த 5 ஆம்திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு77, Cannonbury Avenue, Pinner,.HA5 1TR, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



அளவெட்டி வடக்கு அரசொல்லையை பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில நடைபெற்று பின்னர் பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சிவசோதிலிங்கம் இந்திராதேவி



வேதவனம் வளவு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கும்பிளாவலைப் பிள்ளையார் வீதி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராதேவி சிவசோதிலிங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது.




சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல.120,குட்செட் வீதி,வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு இல.14,மன்னார் வீதி, குருமன்காடு,வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர தீர செயல் புரிந்த சிறுவன்



சக நண்பர்களுடன் வானில ஓம்பிரகாஷ் பள்ளிக்கு போய் கொண்டிருந்த போது வான் திடீரென தீப்பிடித்தது. இதனை அறிந்த ஓம்பிரகாஷ் தனது உயிரை பொருட்படுத்தாது நண்பர்களின் உயிரே மேல் என எண்ணி அவர்களது உயிரை காப்பாற்றியுள்ளான். இவனுடைய வீரதீர செயலுக்காக ஜனாதிபதியினால் சிறுவர்களுக்காக வழங்கப்படும் நேஷனல் பிரேவரி எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, சக நண்பர்களுடன்வானில பள்ளிக்கு போய்க்கொண்டு இருந்த போது, வான் திடீரென தீபிடித்தது. சாரதி வானில் இருக்கும் பள்ளி சிறுவர்களைப் பற்றி கவலைப்படாமல் கதவை திறந்து கொண்டு தப்பியோடி விட்டார், ஆனால் ஓம் பிரகாஷ் பயத்தில் அரற்றிய நண்பர்களை காப்பாற்ற கதவை உடைத்து ஒவ்வொரு மாணவனாக காப்பாற்ற ஆரம்பித்தான்.

கடைசி நேர முயற்சியின் போது கார் கதவின் ரப்பரில் இருந்த தீ ஓம்பிரகாஷின் கன்னத்திலும், முதுகிலும் பட்டு பயங்கரமாக எரிய ஆரம்பித்தது. ஆனால் அந்த வலியையும், வேதனையையும் விட தன் நண்பர்கள் உயிரே பெரிதென நினைத்த அவன் நண்பர்களை காப்பாற்றி வெளியே வரவும், வான் முழுமையாக எரிந்து நாசமானது.

தனக்கு தீக்காயம் ஏற்பட்டவுடன் பயந்து போய் பாதியிலேயே தனது முயற்சியை கைவிட்டு இருந்திருந்தால் நிச்சயம் ஒன்றிரண்டு மாணவர்களை தீக்கு பலி கொடுக்க வேண்டி இருந்திருக்கும்.

சிறு காயங்களுடன் தனது நண்பர்களை காப்பாற்றி விட்ட பெருமிதத்துடன் நின்ற ஓம்பிரகாஷ்க்கு அப்போதுதான் முகத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் கொடூரம் புரிய ஆரம்பித்தது. இதற்குள் அயலவர்கள் திரண்டு வந்து அவனை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தனர். நீண்ட சிகிச்சைக்கு பின் ஓம் பிரகாஷ் உயிருக்கு ஆபத்தின்றி பிழைத்துக்கொண்டாலும், நடந்த சம்பவம் காரணமாக ஏற்பட்ட வடு அழிக்கமுடியாத அளவிற்கு அவனது முகம் சிதைத்து இருந்தது.

ஆனால் அதைப்பற்றி கவலைப்படவில்லை. தன்னால் உயிர் பிழைத்த நண்பர்களும், அவரது பெற்றோர்களும், உறவினர்களும் பள்ளி நண்பர்களும், ஆசிரியர்களும் பூங்கொத்துடன் தன்னை சந்தித்து வாழ்த்து கூறியதையும், கண்ணீருடன் நன்றியை பகிர்ந்து கொண்டதையுமே பெருமையாக நினைத்தான். இவனைப் பெற்றவர்கள் பெருமையாக நினைத்தார்கள், இதையும் தாண்டி சிறுவர்களுக்காக வழங்கப்படும் நாட்டின் வீரதீர சாகச செயலுக்கான விருதினை ஜனாதிபதி வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# காஷ்மீரில் மீண்டும் கடும் மழை; நிவாரணப்பணிகள் இடைநிறுத்தம்



வட இந்தியாவில் வெள்ளத்தில் சிக்கியுள்ள இலட்சக்கணக்கான மக்களை மீட்கும் பணிகள் மீண்டும் மழை பெய்துவருவதால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகள் மழை ஓயும் வரை இடைநிறுத்தப்படுவதாக இந்திய விமானப் படை தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக மழை பெய்யாது இருந்தாலும் தற்போதும் மீண்டும் மழை பெய்துவருவது ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலையை மேலும் மோசமாக்கும் என்றும், இவர்களில் பலர் மழை நீர் உள்ளே வராத விதமான இடங்களில் தங்கியிருக்கவில்லை என காஷ்மீர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக நாட்கணக்கில் கடுமையாக மழைபெய்து வெள்ளப்பெருக்கும் நிலச்சரிவுகளும் ஏற்பட்டதில் நானூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஐ.நா.பொதுச் சபை கூட்டத்திலும் மோடி ஹிந்தியில் உரையாற்றுவார்

(புதுடில்லி)


அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தில் இம் மாதம் 27 ஆம் திகதி உரையாற்றும் பிரதமர் நரேந்திர மோடி இந்தி மொழியில் பேசுவார் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சா ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற இந்திவாஸ் விழாவில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவில உரையாற்றிய ராஜ்நாத் சிங், இந்திய மொழிகள் அனைத்துக்கும் சமஸ்கிருதம் தான் தாயைப் போன்றது. இந்தி உள்ளிட்ட அனைத்து பிராந்திய மொழிகளும் சகோதரிகளைப் போன்றது என்று குறிப்பிட்டார்.

நம் நாட்டில் உள்ள 55 சதவீதம் மக்கள் இந்தி மொழியை பேசி வருவதாகவும், தங்களது தாய்மொழியாக இல்லாதபோதிலும் இந்தியர்களில் 85 முதல் 90 சதவீதம் மக்கள் இந்தியை புரிந்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் முதன்முதலில் இந்தி மொழியில் பேசிய பெருமை, முன்னாள் பிரதமர் அடல பிகாரி வாஜ்பாயையே சேரும. இந்த நாட்டின் அமைச்சர் ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபையில் பேசிய நானும் இந்தியில்தான் உரையாற்றினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஜனாதிபதி பிரணாப் வியட்நாம் பயணம்



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி 4 நாட்கள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை வியட்நாமுக்கு பயணம் செய்துள்ளார்.

இவரை இந்தியாவின் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்களான ராஜ்நாத் சிங் மற்றும் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் வைத்து வழியனுப்பி வைத்தனர்.

இந்த பயணத்தின் போது அவர் வியட்நாமின் ஜனாதிபதி ட்ருவாங் டான் சாங், பிரதமர் ன்குயென் டேன் டுங் மற்றும் அந்நாட்டின் முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதன்போது சர்வதேச. பிராந்திய மற்றும் இவ்விரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறு விவகாரங்கள் குறித்து அவர் பேசவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பாதுகாப்பு, விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் அந்நாட்டு தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தென்சீனக் கடல் எல்லைக்குட்பட்ட வியட்நாம் பெற்றோலிய வளத்தை ஆய்வு செய்யும் ஒப்பந்தத்தை இந்தியாவுக்கு வழங்கியுள்ளமை தொடர்பில் சீனா அதிருப்தி அடைந்துள்ளது. இந்நிலையில், வியட்நாம் எண்ணெய் வள அமைச்சுடன் இந்திய இயற்கை எண்ணெய் வளக் குழுமம் ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்கள இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜயின் முன்னிலையில் கையெழுத்திடப்படவுள்ளதால் அவரின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. (இ)

# இந்தியாவிற்குள் ஊடுருவுவதற்கு லஷ்கர்-இ-தொய்பா கடும்முயற்சி!

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

(புதுடில்லி)

காஷ்மீர் வெள்ளவத்தைப் பயன்படுத்தி படகுகளில் லஷ்கா - இ- தொய்பா இயக்கத்தின் கடற்படை தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவ வைக்கும் முயற்சிகளில் ஜமத் -உத்தவா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஹபீஸ் சயீ ஈடுபட்டுள்ளார்.

இதற்காக அவர் இந்திய எல்லை அருகே முகாமிட்டுள்ளார் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. காஷ்மீரில் கடந்த 10 நாட்களாக பல இடங்கள் தண்ணீரில் மிதப்பதால், இந்த சூழ்நிலையை பாகிஸ்தான் தீவிரவாதிகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் செயற்படும் பல்வேறு தீவிரவாத இயக்கங்களில் லஷ்கர் தொய்பா இயக்கத்திடம் மட்டுமே வலிமையான கடற்படை உள்ளது. அந்த படையில் உள்ள தீவிரவாதிகள் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள நதிகளிலும், கடலிலும் பல்வேறு பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான் எல்லையில் ஓடும் நதியை கடந்து வர இந்த தீவிரவாதிகள் ஏற்கனவே பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

தற்போது எல்லையில் உள்ள நதியில் மழை வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனால் அங்கு நன்ற இந்திய வீரர்கள் பின் வாங்கி வந்துள்ளனர்.

மேலும் தற்போது வந்த இராணுவ வீரர்களில் பலர் வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தை ஊடுருவ ஏற்ற சூழலாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் கருதுகிறார்கள்.

எனவே லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் கடற்படை தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் ஊடுருவ வைக்கும் முயற்சிகளில் ஜமத் உத்தவா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஹபீஸ் சயீது ஈடுபட்டுள்ளார். இதற்காக அவர் இந்திய எல்லை அருகே முகாமிட்டுள்ளார்.



அவர் தலைமையில் சுமார் 60 தீவிரவாதிகள் படகுகளுடன் தயார் நிலையில் உள்ளனர்.

அவர்களிடம் சாடிலைட் போன், நீருக்கு அடியில் புகுந்து நீந்தும் கருவிகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஹபீஸ் சயீது உத்தரவிட்டதும், அந்த தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் ஊடுருவுவார்கள் என்று தெரிகிறது. தீவிரவாதிகளின் இந்த திட்டத்தை இராணுவ உளவுத்துறைகண்டறிந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு பகுதிகளில் நிவாரண பணிகளில் ஈடுபட்டு வருவதாக ஹபீஸ் சயீது கூறியுள்ள போதிலும், தீவிரவாதிகளை காஷ்மீருக்குள் ஊடுருவச் செய்யும் திட்டத்துடன்தான் அவர் அங்கு முகாமிட்டுள்ளதாக உளவுத்துறை கூறுகிறது.

காஷ்மீரில் உள்ள இராணுவ நிலைகளை தாக்கி மிக கடுமையான சேதத்தை ஏற்படுத்தும் திட்டத்துடன் இந்த ஊடுருவலுக்கு திட்டமிட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

லஷ்கர் தீவிரவாதிகள் கையில் சாட்டிலைட் போன், பதப்படுத்தப்பட்ட உணவு கொடுக்கப்பட்டுள்ளதால் மும்பை பாணியிலான தாக்குதல் போல தாக்குதலுக்கு அவரகள் தயாராகி வருவதாக உளவுத்துறையினர் தகவல் கொடுத்துள்ளனர். இதையடுத்து எல்லை வீரர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட உத்தரவிடப்பட்டுள்ளது.

எல்லை காவல் வீரர்களை வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபடுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கு பதில் காஷ்மீரில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், வெள்ள நிவாரண பணிகளை செய்யவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள இராணுவ வீரர்களும், டில்லி பொலிஸாரும் காஷ்மீருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் என்பவர்கள் குறைகளை அறியாதவர்கள் அல்லர். குறைகள் இருந்தும் அவற்றைத் திருத்திக் கொண்டு குணங்களை உண்டாக்கிக் கொண்டவரே சான்றோராவர் -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லோர் சொல்லும் புத்திமதியை கேட்பது நம்மை அழிவிலிருந்து பாதுகாக்கும்

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள் இந்த உலகில் மனிதவாழ்வு எப்படி அமையவேண்டும் என்பதற்கான படைப்புகளாகும்.

இரண்டு இதிகாசங்களையும் எடுத்த நோக்கும் போது, இரண்டிலிலுமே நல்லவர்கள் முதலில் கஷ்டங்களை அனுபவித்துள்ளனர் என்பது தெரியவரும்.

இராமாயணத்தில் இராமன் அவதார புருஷராக போற்றப்படுகின்றான். கோசலையின் மகனான இராமனை பாசத்தோடு வளர்த்தவள் கைகேயி. இருந்தும் மந்தரை என்ற கூனியின் சூழ்ச்சி காரணமாக இராமன் காட்டிற்கு செல்லும் துன்பம் நிகழ்கிறது.

14 ஆண்டுகள் காடு சென்றிருந்தாலும் பரவாயில்லை. காடு சென்றவேளை சீதையை இராவணன் கடத்திச் சென்ற சம்பவம் இருக்கிறதே! அது இராமனுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தது.

இராமன் துன்பப்பட்டுக் கொண்டிருந்தபோது இராவணன் செருக்கோடு இருந்தான். சீதையை அடைய முடியும் என்ற இன்பக்கனவில் அவன் வாழ்வு கழிந்தது.

ஆனால் இராவணனின் செயல் அவனுக்கு அழிவைத் தரப்போகிறது என்பதை இராவண குலத்தில் சிலர் சிந்தித்திருந்தனர். ஆயினும் பலர் அந்த உண்மையை உணர்வதாக இல்லை.

சீதையை கடத்தியதன் காரணமாக இராவண குலம் அழியப் போகிறது என்ற உண்மையை அறிந்த கும்பகர்ணன், அண்ணா சீதையை விட்டுவிடு என்று பல தடவைகள் இராவணனுக்கு எடுத்துக்கூறியும் அவன் கேட்பதாக இல்லை.

ஈற்றில் இராமர் தொடுத்த போரில் இராவணகுலம் அழிந்து போகிறது. இப்போது இராவணனின் அழிவு அவன் தரப்பில் துன்பத்தை ஏற்படுத்த, இராமபிரானின் தரப்பில் மகிழ்வு உண்டாகிறது.

இதேபோன்றதுதான் மகாபாரதமும். ஆரம்பகட்டத்தில் துரியோதனனின் கொடுமையால் பாண்டவர்கள் பெருந்துன்பப்பட்டனர்.

பாண்டவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமையை கொடுக்க மறுத்தது மட்டுமன்றி திரௌபதியின் துகிலை உரிந்து மிகப்பெரும் நட்டாமுட்டித்தனங்களும் பாண்டவர்களுக்குச் செய்யப்பட்டன.

இச் சம்பவங்கள் நடந்த போதெல்லாம் துரியோதனுக்குப் பலரும் புத்திமதி கூறினர். துரியோதனா! பாண்டவர்களை உன் சகோதரர்களாக நினைத்துக் கொள். இந்த நாடு உன்கென்று மமதை கொள்ளாதே! இது அவர்களுக்கு உரியது. இவ்வாறாகப் பலரும் கூறியும் துரியோதனன் கேட்பதாக இல்லை.

புத்திமதி கூறியவர்கள் அனைவரும் துரியோதனைக் காப்பாற்றும் நோக்கோடு கூறியிருந்தனர். ஆனால் சகுனி, துச்சாதனன் உள்ளிட்டவர்கள் துரியோதனனின் செயலுக்கு ஊக்கம் கொடுத்ததன் காரணமாக, ஈற்றில் கௌரவர் சேனை முற்றாக அழிந்து போயிற்று. பாண்டவர்கள் ஆட்சி அமைத்தனர்.

ஐந்து ஊர் தாருங்கள் என்று கேட்டபோது அதைக் கொடுக்க மறுத்த துரியோதனன் இப்போது முழுநாட்டையும் பாண்டவர்கள் ஆள்வதற்குக் கொடுத்துவிட்டு பாவலோகம் சென்றுவிட்டான்.

பாண்டவர்கள் ஆரம்பத்தில் பட்ட துன்பங்கள் போயகல இன்பம் அவர்களை ஆட்கொள்கிறது. இது போன்ற நிலைமைகள் யாருக்கும் ஏற்படலாம். குறிப்பாக நம்நாட்டு ஆளுந்தரப்புகள் இந்த இரு இதிகாசங்களையும் கவனமாகப் படிக்க வேண்டும்.

ஐ.நா விசாரணைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்பதும், தமிழர்களின் உரிமையை கொடுங்கள் என்று கூறுவதும் கௌரவர் சேனைக்குக் கூறப்பட்ட புத்திமதி போன்றது எனக் கருதுக.

எல்லாவற்றையும் தூக்கியெறிந்தால், மேற்குறிப்பிட்ட இரண்டு இதிகாசங்களின் முடிபு எங்கள் நாட்டிலும் நிஜமாகும் என்பது சர்வ நிச்சயம்.

## சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள இலங்.அதிகாரிகளுக்கு கனடா மறுப்பு

(கொழும்பு)

கனடாவில் நடைபெற்று வரும் சர்வதேச சிறைச்சாலைகள் தொடர்பான மாநாட்டில் பங்கேற்கச் சென்ற இலங்கையின் இரு அதிகாரிகள் இராணுவத்தை சேர்ந்தவர்களாக இருப்பர் என்ற சந்தேகத்தில் அவர்களுக்கு விசா வழங்க கனேடிய அரசு மறுத்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சிறைச்சாலைகள் தொடர்பான மாநாடு கனடாவில் கடந்த 7ஆம் திகதி தொடங்கி நேற்று 14 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் திஸ்ஸ ஜயசிங்க, வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சன் ஆகியோர் பங்கேற்கவிருந்தனர்.

எனினும் இவர்கள் இலங்கை ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களாக இருப்பர் எனச் சந்தேகம் தெரிவித்த கனேடியத் தூதரகம், அவர்களுக்கு விசா வழங்க மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இதனால் இலங்கை சார்பில் எவரும் அந்த மாநாட்டில பங்கேற்கவில்லை என சிறைச்சாலை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அதிகாரிகளுக்கு விசா வழங்க மறுப்புத் தெரிவித்ததன் மூலம் அவர்களின் உரிமையை கனடா மதிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

18 நாடுகள் கலந்துகொண்டுள்ள இந்த மாநாடு கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது.

அப்போது இலங்கை சார்பில் ஒரு அதிகாரியே பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## சீனாவின் 'சில்க்' பாதைத் திட்டம் இலங்கை ஜனாதிபதி வரவேற்பு

சீன ஜனாதிபதியால் முனனெடுக்கப்படும் 21 ஆம் நூற்றாண்டின் புதிய கடலோர சில்க் பாதை திட்டத்தை தான் வரவேற்கிறார் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இத்திட்டம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானது என குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் சின்குவா செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி இலங்கை சீனாவின் இந்த திட்டத்தில் இணைந்து கொளளும் என குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த 28 வருட காலப்பகுதியில் சீன ஜனாதிபதி ஒருவர முதல்தடவையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார், இரு தரப்பு உறவுகளுக்கு இவரது வருகை முக்கியமானது.

வரலாற்று ரீதியாகவே இரு நாடுகளுக்குமிடையில் நல்லுறவு காணப்படுகின்றது. கடந்த மே மாதத்தில் இரு நாடுகளும் தங்களுடைய உறவுகளை மேலும் தரமுயர்த்தியதை தொடர்ந்து நட்புறவு புதிய சகாப்தத்திற்குள் நுழைந்துள்ளது.

ஜனாதிபதியாக நான் பதவியேற்ற பின்னர் ஏழு தடவைகள் சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன்.

இதன்போது பல தடவைகள் சீனா ஜனாதிபதியை நான சந்தித்துள்ளேன். சீனாவுடன வர்த்தகத்தையும் முதலீட்டையும் அதிகரிக்க இலங்கை விரும்புகின்றது.

2009 இல் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், இரு நாடுகளும் புனர்நிரமாணம் மற்றும்ஏனைய துறைகளில் ஒத்துழைத்துள்ளன என்றார். (செ-6)

## சிறுமியை கடத்தியோர் விளக்கமறியலில்

வெல்லவ் பிரதேசத்தில் 4 வயதுச் சிறுமி தமாரா கேஷானி விஜேகோனின் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், மேற்படி கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான கிரீஸ் யகா என்றழைக்கப்படும ஐ.ஏ.காமினியை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## தேர்ச் சில்லில் சிக்குண்டு ஒருவர் பலி; நால்வர் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரசித்தமான சிவன் ஆலயங்களில் ஒன்றான தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நேற்றைய தேரோட்ட உற்சவத்தின் போது தேர் சில்லில் அகப்பட்டு ஒருவர் பலியானதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

முனைக்காடு வாசியான எஸ். ஜீவானந்தம் (வயது 42) என்பவரே தேர்ச் சில்லில அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

மேலும் காயம்பட்ட நால்வர் உடனடியாக மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

பிள்ளையார் வலம் வந்த தேர், ஆலய உள் வீதியில் உலா வரும்போது அக்கினி மூலையில் வைத்து ஜீவானந்தம் தேரின் பின்புறச் சில்லுக்குள் அகப்பட்டு மரணமாகியுள்ளார்.

இலேசான மழை பெய்து கொண்டிருந்ததால் ஜீவானந்தமும் காயம் பட்ட ஏனைய நால்வரும் வழுக்கி விழுந்து தேரின் மரச் சில்லு க்குள் அகப்பட்டிருக்கலாம் என்று தேரோட்டத்தில் கலந்து கொண்ட அடியார்கள் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவிருக்கிறது. (செ-6)

## பாகிஸ்தான் உளவாளியின் காதலியிடம் விசாரணை

(சென்னை)

தமிழகத்தில் மிகப்பெரிய நாசவேலையை நடத்தும் சதித் திட்டத்துடன் உளவு பாரத்ததாக தேசிய புலனாய்வு குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த பாகிஸ்தான் உளவாளியான, அருண் செல்வராசனின காதலி என்று சந்தேகிக்கப்படும் பெண்ணிடம் தேசிய புலனாய்வு குழுவினர் விசாரணைநடத்தியுள்ளனர்.

அருண் செல்வராசன் தங்கியிருந்த சென்னை சாலி கிராமத்தில் உள்ள வீட்டுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள அலுவலகத்துக்கும் இளம் பெண் ஒருவர் அடிக்கடி வந்து சென்றுள்ளார்.


தேசிய புலனாய்வு குழுவினர் நடத்திய விசாரணையில், சென்னையை சேர்ந்த அந்த பெண்ணை அருண் செல்வராசன் காதலித்து வந்ததும், கடந்த சில மாதங்களுக்கு முன்பு அந்த பெண்ணோடு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

இதையடுத்து அருண் செல்வராசனின் காதலியிடம பொலிஸார் இரகசிய விசாரணை நடத்தி, அவரிடம் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

இதேபோன்று அருண் செல்வராசனுக்கு வீட்டை வாடகைக்கு அளித்த வீட்டு உரிமையாளர், அலுவலகத்தை வாடகைக்கு அளித்தவர் மற்றும் அயலவர்களிடமும் தனித்தனியாக விசாரணை மேற கொள்ளப்பட்டு வருகிறது என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அருள் வெள்ளம்



நமது வாழ்க்கையின் நோக்கம் அமைதியும் நிறைவும் பெற்று வாழ்வதோடு ஆன்ம வளர்ச்சி பெறவேண்டும் என்பதேயாகும். ஆன்ம வளர்ச்சியை முதற்குறிக்கோளாகக் கொண்டால் பிறவெல்லாம் அற்பமாகவே தோன்றும். மனதை நிறை நிலையில் வைத்துக்கொள்வோம். கடமையின் மதிப்புணர்ந்து செயலாற்றி வாழ்வோம்.

உண்மையிலேயே ஆன்ம வளர்ச்சியை வேண்டுபவர் சிக்கல்களையும் பிணக்குகளையும் தாண்டி அறிவைச் சுதந்திரமாக இயங்க விடவேண்டும். விரிந்த பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளையும் மனித வாழ்க்கையும் இணைத்து ஒத்துச் சிந்தியுங்கள். தன்முனைப்பு என்ற திரை கரைந்துவிடும். தன்முனைப்பும் இயற்கை நியதியறியாமையும் ஒன்றை ஒன்று தழுவி நிலைத்திருக்கின்றன.

இதனால் மனிதன் தன்னிடம் ஒரு கற்பனை மதிப்பை (False Prestige) உருவாக்கிக் கொள்கிறான். இந்த மருள்நீண்ட மதிப்பை அடிப்படையாகக் கொண்டு பிறரை ஒப்பு நோக்கும் கருத்தில் வேறுபாடுகளும் பிணக்குகளும் எழுகின்றன. தனது மனதைச் சீரமைத்துக்கொண்டு எவரை எக்கருத்தைத் தன்னோடு ஒப்பு நோக்கினாலும் ஒரு சமநிலை உணர்வு உண்டாகும். இந்த உணர்வில்தான் பேரின்பம் தேக்கி நிற்கின்றது. இப்பேருணர்வே அருள் வெள்ளமாகும்.

## ஆயுதத் தாக்குதலில் இளைஞர் பலி

வென்னப்புவ- சிரிகம்பல-பெலவத்தை சந்தியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட முரணபாடு காரணமாகவே இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


தாக்குதலில் பலியானவர் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 25 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.


இதன்போது மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதோடு, அவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை, சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதர்ன் எக்ஸ்பிரஸ்சை வென்றது நார்தன்





சம்பியன்ஸ் லீக் தகுதி சுற்றுத்தொடரின் முதல் போட்டியில் நார்தன் டிஸ்ட்ரிக்ஸ் (நியூசிலாந்து), சதர்ன் எக்ஸ்பிரஸ் (இலங்கை) அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் நார்தன் டிஸ்ட்டிரிக்ஸ் அணி மூன்று விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முந்தைய நாள் இரவிலும், காலையிலும் பெய்த கன மழை காரணமாக ஆட்டம் தொடங்குவதில் 2 மணி நேரம் தாமதம் ஆனது.

இதனால் தலா 10 ஓவர் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது.

நாணய சுழற்சியில் வென்ற நார்தன் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெகன் முபாரக் தலைமையிலான சதர்ன் எக்ஸ்பிரஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 92 ஓட்டங்கள் எடுத்தது.

அவ்வணி சார்பாக தொடக்க ஆட்டக்காரர்கள் குசல் பெரேரா 37 ஓட்ட ங்களும், தனுஷ்கா குனதிலகா 39 ஓட்டங்களும் விளாசினர். தொடக்க ஜோடிக்கு மட்டும் நார்தன் களத்தடுப்பாளர்கள் 5 பிடிகளை தவற விட்டது குறிப்பிடத்தக்கது.

பவுல்ட் 2 விக்கெட்டுகளும், டிம் சவுதி, ஸ்டைரிஸ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

தொடர்ந்து விளையாடிய நார்தன் டிஸ்ட்டி ரிக்ஸ் அணி 9.3 ஓவர்களில் 96 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடிய அனுபவம் வாய்ந்த தொடக்க ஆட்டக்காரர் கனே வில்லியம்சன் 52 ஓட்டங்களை எடுத்து வெற்றியை உறுதி செய்தார். வில்லியம்சன் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

# திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக யாழ். மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட போட்டி

## அடுத்த சுற்றில் பலாலி விண்மீன், அல்வாய் நக்கீரன்

பலாலி விண்மீன் விளையாட்டு கழகம், அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகம் என்பன அடுத்த சுற்றுப் போட்டிகளுக்கு முன்னேறியுள்ளன.

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகமும் மோதின.

பலமான விண்மீன் அணி சிவகுமரனை இலகுவில் வெற்றி கொள்ளும் என்றே அனைவரும் கணித்திருந்தனர். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாக போட்டி பரபரப்பின் உச்சக்கட்டம் வரை சென்றது. சிவகுமரன் அணியினர் கோல்களைப் பெற முடியாத அளவிற்குப் பலாலி விண்மீனுக்குச் சவால் விடும் வகையில் விளையாடி அவர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தனர்.

இடைவேளைக்கு முன்னர் இரு அணியினருக்கும் கோல் போடுவதற்கான சந்தர்ப்பங்கள் பல கிடைத்தன . அதிலும் சிவகுமரன் அணிக்கு 2 அருமையான சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அவ்வணி வீரர்களால் உதைக்கப்பட்ட பந்துகள் கோல் காப்பாளர்களுக்கும் அருகிலும் சென்று ஏமாற்றியது.

இடைவேளையின் பின்னரும் இதே நிலையே தொடர்ந்தது. இதேவேளை இரு அணியினதும் பின்கள வீரர்களினதும் அபாரமான தடுத்தாடு உத்தியினால் இரு அணிகளாலும் கோல்களைப் போட முடியவில்லை. இதனால் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதையில் முதலில் வழங்கப்பட்ட 5 உதைகளிலும் இரு அணி வீரர்களும் கோல் பெறும் வாய்ப்பை கை நழுவ விட்டனர். மேலதிகமாக வழங்கப்பட்ட உதைகளில் 2:1 என்ற அடிப்படையில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற மற்றொரு பரபரப்பான ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழகமும் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகமும் மோதின.

பரபரப்புக்கு குறைவில்லாமல் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் இடைவேளையின் பின் நக்கீரன் விளையாட்டுக்கழகம் சார்பாக சிந்துஜன் ஒரு கோலைப் போட்டு அசத்தினார்.

போட்டி நேரம் நிறைவு பெற 1:0 என்ற கோல்கள் அடிப்படையில் அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# டோனியிடம் இருந்து பாடம் கற்றேன்; நியூசிலாந்து கப்டன் மேக்குல்லம்



நியூசிலாந்து அணியின் கப்டன் பிரண்டன் மேக்குல்லம். ஐ.பி.எல். போட்டியில் முதலில் இவர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் விளையாடினார். பின்னர் கொச்சி டஸ்கர்ஸ் அணிக்கு மாறினார்.

இந்த ஆண்டில் இருந்து மேக்குல்லம் சென்னை சுப்பர்கிங்ஸ் அணியில் விளையாடி வருகிறார் வெஸ்ட் இண்டீஸ் வீரர் சுமித்துடன் இணைந்து அவர் ஐ.பி.எல். போட்டியில் அதிரடியாக விளையாடினார்.

சம்பியன்ஸ் 'லீக்' போட்டிக்காக மேக்குல்லம் சென்னையில் பயிற்சி பெற்று வருகிறார். இந்திய அணி கப்டன் டோனியிடம் இருந்து தான் பாடம் கற்று வருவதாக மேக்குல்லம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

சென்னை சுப்பர்கிங்ஸ் அணியில் விளையாடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் அணியில்தான் அதிகமான சர்வதேச கப்டன்கள் உள்ளனர். இது தவிர கப்டன் பதவிக்கு உரிய திறமையான வீரர்களான ரெய்னா, அஸ்வின் அணியில் உள்ளனர்.

விக்கெட் கீப்பராக பணியாற்றுபவர் கப்டனாக செயற்படுவது சவாலானதே. நான் இது தொடர்பாக டோனியிடம்தான் பாடம் கற்று வருகிறேன்.

ஒருநாள் போட்டியின் கப்டன் பதவியில் டோனி மிக சிறப்பாக செயற்படுகிறார். இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் ஒருநாள் தொடரை இந்திய அணி வென்றது சிறப்பானது.

உலக கோப்பை போட்டியில் டோனி தலைமையிலான இந்திய அணியை வீழ்த்துவது சவாலானது.

சம்பியன்ஸ் 'லீக்' போட்டியில் வெற்றி பெற சென்னை சுப்பர்கிங்ஸ் அணிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு மேக்குல்லம் கூறியுள்ளார். ஐ.பி.எல். போட்டியல் மேக்குல்லம் 62 ஆட்டத்தில் விளையாடி 1,644 ரன் எடுத்துள்ளார். (க)

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி



யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினரால் பொன். விபுலானந்தன் ஞாபகார்ந்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான வடமாகாண ரீதியிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது.இச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது அணியின் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)



வாழ்வக நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி ஞாபகார்த்த வருடாந்த விளையாட்டுப்போட்டி மருதனார்மடம் பெண்கள் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌதி, போல்ட் பந்துவீச்சில் மிரண்டது லாகூர் லயன்ஸ்

## நோர்தன் நைட்ஸ் அணி 72 ஓட்டங்களால் இலகு வெற்றி



டானியல் பிளைன், பி.ஜே.வோட்லிங் ஆகியோரின் அதிரடியும், ரிம் சௌதி, ட்ரன்ட் போல்டின் பந்துவீச்சும், கைகொடுக்க பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் அணியை நியூசிலாந்தின் நோர்தன் நைட்ஸ் அணி 72 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி கொண்டது.

6வது சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடரின் தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் 3வது போட்டி லாகூர் லயன்ஸ் - நோர்தன் நைட்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று ராய்பூரில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற லாகூர் லயன்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நோர்தன் நைட்ஸ் அணி 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் நோர்தன் நைட்ஸ் அணி சார்பில் டானியல் பிளைன், பி.ஜே.வோட்லிங் ஆகியோர் தலா 53 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் லாகூர் லயன்ஸ் அணி சார்பில் சீமா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


171 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த லாகூர் லயன்ஸ் அணி, ரிம் சௌதி, ட்ரன்ட் போல்ட் ஆகியோரின் வேகத்தில் மிரண்டு தனது முதல் 5 விக்கெட்டுக்களையும் வெறும் 19 ஓட்டங்களுக்கு இழந்து தத்தளித்தது.

எனினும் நசீம் சிறப்பாக (58) துடுப்பெடுத்தாடிய போதிலும் தொடர்ந்து வந்த வீரர்களும் பிரகாசிக்காமையால் லாகூர் லயன்ஸ் அணியால் 18 ஓவர்கள் வரையே தாக்குப்பிடித்து வெறும் 98 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.


பந்துவீச்சில் அசத்தலாக செயற்பட்ட ரிம் சௌதி 3, ட்ரன்ட் போல்ட் 2, சோதி 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நோர்தன் நைட்ஸின் ரிம் சௌதி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 4 புள்ளிகளை பெற்றுக் கொண்ட நோர்தன் நைட்ஸ் அணி சம்பியன்ஸ் லீக்கின் பிரதான சுற்றில் விளையாடும் வாய்ப்பை உறுதி செய்தது.



## சஜீட் அஜ்மலின் விதிமீறிய பந்துவீச்சு; லட்சங்களை கொட்டும் கிரிக்கெட் சபை



சஜீட் அஜ்மலின் பந்துவீச்சை சரிசெய்ய முன்னாள் பாகிஸ்தான் வீரர் சக்லைன் முஸ்தாக்குக்கு மாதம் ரூ.10 லட்சம் ஊதியம் கொடுக்கப்படுகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழல்பந்து வீரரான சஜீட் அஜ்மல் பந்தை வீசாமல் எறிகிறார் எனக் கூறி சர்வதேச கிரிக்கெட் சபை அவருக்கு இடைக்கால தடை விதித்தது.

மேலும் அவர் பந்து வீசுவது முழுமையான விதிமீறல். ஒரு பந்து கூட விதிகளுக்கு உட்பட்டது இல்லை என்று ஐ.சி.சி. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையில் சஜீட் அஜ்மலின் பந்து வீச்சை சரி செய்ய முன்னாள் பாகிஸ்தான் வீரர் சக்லைன் முஸ்தாக் உதவியை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நாடியுள்ளது.

இதற்காக சக்லைன் முஸ்தாக்குக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மாதம் ரூ.10 லட்சம் வழங்குகிறது. பயோ மெக்கானிக் முறையில் அஜ்மலின் பந்துவீச்சு முறையை சோதனை செய்து அதனை மாற்ற சக்லைன் முடிவு செய்துள்ளார்.

இதுபற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறுகையில், சக்லைன் முஸ்தாக்கின் பயிற்சி முடியும்வரை அஜ்மலை உள்ளூர் போட்டிகளில் விளையாட வேண்டாம் என வலியுறுத்தியுள்ளதாகவும், லாகூர் வரும் அவர் வருகிற 21-ம் திகதி முதல் தனது பணியை தொடங்குவார் எனவும் கூறியுள்ளது.

சக்லைன் முஸ்தாக் பாகிஸ்தான் அணியின் தலைசிறந்த சுழல்பந்து வீரராக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

| குவாலிபயர்ஸ் | | போட்டி | நி.ஓ.சராசரி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | NK | 2 | +2.684 | 8 |
| 2 | MI | 2 | +0.498 | 4 |
| 3 | LIO | 2 | -1.496 | 4 |
| 4 | SE | 2 | -1.670 | 0 |

## எக்ஸ்பிரஸ் வேகத்தில் மும்பை வெற்றி; சம். லீக்கில் தனது நிலையை தக்க வைத்தது



லெண்டல் சிம்மன்ஸ், மைக்கல் ஹசியின் எக்ஸ்பிரஸ் வேகத்திலான ஆரம்ப இணைப்பாட்டம் கைகொடுக்க மும்பை இந்தியன்ஸ் அணி தீர்மானம்மிக்க போட்டியில் இலங்கையின் சதர்ன் எக்ஸ்பிரஸ் அணியை 22 பந்துகள் மீதமிருக்கையில் 9 விக்கெட்டுக்களால் இலகுவாக வீழ்த்தியது.

6வது சம்பியன்ஸ் லீக் இருபது - 20 தொடரின் தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் 4வது போட்டி மும்பை இந்தியன்ஸ் - சதர்ன் எக்ஸ்பிரஸ் அணிகளுக்கு இடையில் நேற்று ராய்பூரில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சதர்ன் எக்ஸ்பிரஸ் அணி ஒருகட்டத்தில் 90 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறினாலும் அஞ்சலோ பெரேரா - பர்வேஸ் மகரூப் ஆகியோர் தமக்கிடையில் 6வது விக்கெட்டுக்காக பகிர்ந்த 58 ஓட்டங்களின் உதவியுடன் சதர்ன் எக்ஸ்பிரஸ் 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சதர்ன் எக்ஸ்பிரஸ் அணி சார்பில் பர்வேஸ் மகரூப் 41, குணதிலக 30, அஞ்சலோ பெரேரா 28 ஓட்டங்களை எடுத்தனர்.

162 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த மும்பை அணிக்கு சிம்மன்ஸ் - ஹசியின் எக்ஸ்பிரஸ் வேகத்திலான ஆரம்ப இணைப்பாட்டம் (139 ஓட்டம், 14.4) கைகொடுக்க அவ்வணி 16.2 ஓவர்களின் நிறைவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 9 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை (165) அடைந்தது.

மும்பை அணியின் துடுப்பாட்டத்தில் சிம்மன்ஸ் ஆட்டமிழக்காமல் 76, ஹசி 60, பொலார்ட் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களை எடுத்தனர்.

போட்டியின் நாயகனாக மும்பை அணியின் சிம்மன்ஸ் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 4 புள்ளிகளை பெற்றுக் கொண்ட மும்பை அணி பிரதான சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பையும் தக்க வைத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ஏக்கர்...

காட்டுக்கு எவராவது தீ வைத்தனரா அல்லது எவ்வாறு தீ வித்து ஏற்பட்டது என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (செ-6)


**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்)

136+ நாடுகளில் 1040+ கிளைகள் உயர் தகுதியுடைய ஆசிரியர்கள். சரியான உச்சரிப்பு. நேரடியாக பிரெஞ்சு ஆசிரியரிடம் படிக்கலாம்.

இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2) ஐ வழங்குகின்றது பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம் ஓரிரு மாதங்களும் படிக்கலாம் LETTRE & PHOTOCOPIES இலவசம்

உடன் பதியுங்கள் குறிப்பு வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் தகவல்களுக்கு.. 021 320 2787

கோலாசிற்றி தொழில் வங்கி

224/1. நாவலர் வீதி. யாழ்ப்பாணம். நேரில் வரவும்



**உடனடி வேலைவாய்ப்புகள்**

கிளிநொச்சி/முல்லைத்தீவு/வவுனியா/மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கான பல்வேறுபட்ட வேலைவாய்ப்புகள் உள்ளன.

14 பேருக்கு முன்னுரிமை

✦Distributor ✦Supervisor ✦Team Leader

வயதெல்லை:-18-35

அடிப்படை தகைமை:-O/L. தங்குமிடம் & உணவு இலவசம்

தொடர்புகளுக்கு:-0778794077, 0777981471



**இது வெறும் வாய்ச்சவடால் அல்ல. வென்று வந்த விசாக்களை நேரில் எவரும் வந்து ஆய்வு செய்யலாம்**

செங்கன் விசா-சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி... உட்பட 26 நாடுகள் 2 வருட விசா

படிக்கவும் உழைக்கவும் அரியவாய்ப்பு 17.09.2014 வரை

சில நிபந்தனைகளுக்கமைவாக 100% விசா உறுதிப்பாடும் சனி, ஞாயிறு உட்பட 7 நாட்களும் திறந்திருப்போம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

அரசாங்க பதிவு-PV82703

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090


## டெங்கு அபாயம்...

லில் 6 பேருக்கு டெங்குத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெண்கள் விடுதியை தற்காலிகமாக மூடுவது என்றும், இதனுடன் கலைப்பீடத்தின் முதலாம், இறுதி வருட மாணவர்களுக்கான விரிவுரைகளை (சட்டம், நுண்கலை தவிர்ந்த) தற்காலிகமாக நிறுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஏனைய பீடங்கள், மற்றும் கலைப்பீடத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## ஜனவரி...

இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் நான்கு வருடங்கள் நவம்பர் 19 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றன.

ஜனாதிபதி தேர்தலை 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில் நடத்துவதற்கு அரசாங்கம் கலந்தாலோசித்திருந்த நிலையில், பாப்பரசர் பிரான்சிஸ், ஜனவரி மாதம் 13ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பதனால் அவருடைய வருகைக்கு முன்னரே தேர்தலை நடத்தி முடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள தாகவும் ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட வேலைகளை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுக்கவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-6)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

கரவாதம் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

உலகில் உள்ள 80 நாடுகள் இந்த பயங்கரவாதிகளுடன் போரிட்டு வருகின்றன. இதற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் பொறுப்புக் கூறவேண்டும்.

இஸ்ரேல், நைஜீரிய நாடுகளில் பொக்கோ ஹராம், ஆப்கானிஸ்தானில் தலிபான், ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ், மலேசியா, இந்தோனேசிய நாடுகளில் ஜம்மிய இஸ்லாமியா, இந்தியாவில் லக்ஸ், தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகளும், சூடான் மற்றும் சிரியா போன்ற நாடுகளை அராஜக நிலைமைக்கு கொண்டு செல்ல வஹாபி வாதத்தை ஏற்றுக்கொண்ட முஸ்லிம் அடிப்படைவாதிகள் முழு உலகிலும் செயற்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேல் காரணமாகவே இந்த முஸ்லிம் அடிப்படைவாதிகள் உருவாகி செயற்பட்டு வருவதாக சிலர் கூறுகின்றனர்.

அமெரிக்காவும் இங்கிலாந்தும் தமது பொருளாதார, அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் நாடுகளை அராஜக நிலைக்குள் தள்ள பல நாடுகளில் உள்ள பல்வேறு குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றன. இதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஈராக்கில் உள்ள எண்ணெய் வளத்திற்காகவே அமெரிக்கா ஈராக்கின் பாத் என்ற சமவுடமை கட்சியை அழித்து சதாம் ஹுசைனை அடக்கியது.

இதற்காக அந்த நாட்டில் இருந்த குழுக்களுக்கு ஆயுதங்களை விநியோகித்தது. தற்பொழுது அந்த குழுக்களுக்கு எதிராக குண்டு தாக்குதலை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான தலைவிதியை ஏற்படுத்தும் செயற்பாடு எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-6)

## நீதிமன்ற...

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து மகிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை எதிர்பார்ப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. 2010ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 18-வது அரசியல் அமைப்பில் ஜனாதிபதி ஒருவர் மூன்றாவது முறையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்ற வசதி செய்யப்பட்டுள்ள போதும் அதில் சில சட்ட சிக்கல்கள் உள்ளன. எனவே மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக போட்டியிடமுடியாது என்று கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அவ்வாறு போட்டியிடுவதற்கு 18-வது அரசியல் அமைப்பு வழியேற்படுத்தவில்லை என்று கூறி தாம் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் மூன்றாவது முறை தாம் போட்டியிடுவதற்கான பச்சைவிளக்கு சமிஞ்சையை மகிந்த ராஜபக்ஷ நாட்டின் சட்டத்துறை உயர்நிலை அதிகாரியை சந்தித்து பெற்றிருக்கிறார். எனவே அவர் தேர்தலில் மூன்றாம் முறையாகவும் போட்டியிட தயாராகி விட்டார் என்று ஹிந்திய செய்தி வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் உயர்நீதிமன்ற ஆலோசனையை பெற முயற்சிக்கமாட்டார் என்று மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார். (செ-6)


After A/L...

75% நேரடி கட்டணக் கழிவு



கணினி ஆங்கில கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

அனைத்து கிளைகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம் 15/9/2013 காலை 20/9/2013 9.30

தரமானதும் முழுமையானதுமான கல்விக்கு

DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, Tel: 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, Tel: 021-227 0775 |
| சுன்னாகம் | No.130, கே.கே.எஸ் வீதி, Tel: 021-224 1970 |



# வங்கிக் கடன்

உங்களின் உயர் கல்வி கனவை நனவாக்கிக் கொள்வதற்கு Wisdom கல்வி நிறுவனம் கல்விக் கடன் வசதியை வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருவதற்கு தயாராக உள்ளது. இதற்கான ஒழுங்குகளையும் ஏற்பாடு செய்து தருவதற்கு வங்கிகளின் நேரடி பிரசன்னத்துடனான சேவை ஒன்றை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

இடம்:- Wisdom Business Academy
154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 16.09.2014

நேரம்:- காலை 10.00 மணி

அனைவரும் வாரீர்! அதிபயன் அடைவீர்!



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் 021 753 8330, 0777 151 101





" தரம் ஒன்றே எமது தாரக மந்திரம்"

WISDOM BUSINESS ACADEMY

மேலதிக விபரங்களுக்கு 021 2220727, 021 7200777

Wisdom Business Academy
The Specialist in CIMA Education

154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதியும் நாவலர் வீதியும் இணையும் சந்தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.